இலவச பிரதி

Registered as a NewsPaper

விலை ரூபா: 10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12



S.M கோல்ட் ஹவுஸ்

வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள

S.M கோல்ட் ஹவுஸ்


இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.

உரிமையாளர்:- S.M.சண்முகரத்தினம்.

T.P: 024-222 4247 (சி-13510)

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | மார்கழி-10 | 25-12-2005 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை-310

# நத்தார் நள்ளிரவு ஆராதனையின் போது ஜோசப் பரராசசிங்கம் பா.உ படுகொலை



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட தமிழ்தேசியக் கூட்டமைப்பு சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராசசிங்கம் அவர்கள் (வயது-71) இன்று அதிகாலை மட்டக்களப்பிலுள்ள புனிதமரியாள் இணைப்பேராலயத்தில் நத்தார் நள்ளிரவு ஆராதனையின் போது படுகொலை செய்யப்பட்டுள்ளார். இவரது மனைவி உட்பட எட்டுப்பேர் காயமடைந்தனர்.

மட்டக்களப்பு நகரத்தின் மத்தியில் பிரதான வீதியில் ஆயர் இல்லத்துக்கு அருகேயுள்ள மேற்படி தேவாலயத்தில் மட்டக்களப்பு-திருகோணமலை ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை நத்தார் ஆராதனைகளை நடத்திக்கொண்டிருந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நள்ளிரவு ஆராதனை முடிவடைந்து தேவநற்

(12ஆம் பக்கம் பார்க்க)

# யு.நி.அமுலாக்கத்தை உறுதி செய்தல்; நோர்வேயில் முதற்கட்டப் பேச்சுக்கள்

## எமது தலைமை உறுதியாகவுள்ளதென சு.ப.தமிழ்ச்செல்வன் இணைத் தலைமையிடம் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

*சிறிலங்காப் படையினருக்கும் மக்களுக்குமிடையே ஏற்பட்டுள்ள முறுகல் நிலையைக் கட்டுப்படுத்துவதானால் உடனடியாக யுத்த நிறுத்த அமுலாக்கம் உறுதி செய்யப்பட வேண்டுமெனவும் நோர்வேயில் முதற்கட்டமாக யுத்தநிறுத்த அமுலாக்கம் குறித்த பேச்சுவார்த்தைகளை நடத்தலாம் என்பதில் எமது தலைமைப் பீடம் உறுதியாக உள்ளதெனவும் தமிழீழ அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் இணைத்தலைமை நாடுகளின் தூதுவர்களிடம் தெரிவித்துள்ளார்.*

நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்ற இணைத் தலைமை நாடுகளின் தூதுவர்களுடனான பேச்சுக்களையடுத்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதன் போது அவர் தொடர்ந்து கூறுகையில் ;

கேள்வி :- இன்றைய சந்திப்பு தொடர்பாக?

பதில் :- இணைத்தலைமை என்று சொல்லப்படுகின்ற யப்பான், ஐரோப்பிய ஒன்றியம், நோர்வே, பிரித்தானியா ஆகிய நாடுகளின் தூதுவர்கள் உள்ளடங்கிய தூதுக்

(10 ஆம் பக்கம் பார்க்க)



இணைத்தலைமை நாடுகளின் தூதுவர்களுடனான சந்திப்பு

## துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலி

திருகோணமலை உவர் மலைப்பகுதியில் வைத்து இனந்தெரியாதோரின் துப்பாக்கிச்சூட்டிற்கு இலக்காகி நேற்றிரவு ஒருவர் உயிரிழந்துள்ளார்.

திருகோணமலை பொலிஸ்நிலையம் அமைந்திருக்கும் அண்மையப் பகுதியில் உள்ள அவரது வீட்டில் வைத்து இவர் சுடப்பட்டுள்ளார். வீரக்கொடி என்பவரே உயிரிழந்தவர் என இனங்காணப்பட்டுள்ளது.




## ஆழிப்பேரலை காவு கொண்டோருக்கு தமிழீழத் தாயகம் எங்கும் வணக்கம்

ஆழிப்பேரலையால் காவுகொள்ளப்பட்ட எமது உறவுகளுக்காகவும் ஏனைய தேசங்களின் உறவுகளுக்காகவும் 2005.12.26 ஆம் நாள் முற்பகல் 10.30 மணிக்கு தமிழீழத் தாயகம் எங்கும் வணக்கம் செலுத்தப்படவுள்ளது.

முற்பகல் 10.30 மணிக்கு ஆழிப்பேரலையால் காவுகொள்ளப்பட்டோருக்கு அகவணக்கம் செலுத்தும் வகையில் மணியொலி எழுப்பப்படும். 10.31 இற்கு மக்கள் அனைவரும் அகவணக்கம் செலுத்துவர். தொடர்ந்து 10.32 இற்குச் சுடரேற்றல் நடைபெறும் எனத் தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 26 ஆம் நாள் ஆழிப்பேரலையால் எமது தாயகத்திலும் சிங்கள தேசத்திலும் தமிழகம்மற்றும் தெற்காசியா,

(12ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு

22.12.2005 அன்று யாழ். நகர்ப் பகுதியில் (ஈ.பி.டி.பி)தேசவிரோதக் குழுவினரும் இராணுவப் புலனாய்வுத்துறையினரும் இணைந்து நடத்திய தாக்குதலின் போது நாட்டுப்பற்றாளர் ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

நாட்டுப்பற்றாளர்-நவரெட்ணம்

(கிருஸ்ணன்-நவரெட்ணம் மடத்தடி வீதி யாழ்ப்பாணம்)என்ற நாட்டுப்பற்றாளரே வீரச்சாவ டைந்துள்ளார்.

12.10.2005 அன்று சந்தனமடுப்பகுதியில் இராணுவப் புலனாய்வுத் துறையினரின் (12ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

22.12.2005 அன்று தவறுதலான விபத்தின் போது போராளி ஒருவர் சாவடைந்துள்ளார்.

கப்டன் -முல்லை

(ஜெயபாலன்-தயாழினி (தயா) அராலி யாழ்ப்பாணம். த.மு. குளக்கட்டு வீதி, உடையார்கட்டு தெற்கு, உடையார்கட்டு (முல்லைத்தீவு) என்ற போராளியே சாவடைந்துள்ளார். இம்மாவீரருக்கு விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## யாழ்.விளையாட்டரங்கப் பகுதியில் பெண் உட்பட 5 பேர் இராணுவத்தால் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.விளையாட்டரங்கப்பகுதியில் நேற்றுமாலை படையினர்மீது நடத்தப்பட்டதாக்குதலையடுத்து படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருபெண் உட்பட ஐந்து பேர் பலியாகியுள்ளனர்.

மாலை 6.10 மணியளவில் படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலையடுத்து படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டிலேயே இவர்கள் பலியாகியுள்ளனர்.

அப்பகுதியில் இரவு 8.30 மணிவரை துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டவண்ணமேயிருந்ததாகவும் தெரியவருகிறது. இதனால் அப்பகுதி பெருந்துறிலையப்பகுதி உட்பட நகரம் வெறிச்சோடியது.

இதனையடுத்து நேற்றிரவு சுமார் 10.00 மணியளவில் சிறிலங்காப் படையினர் ஐவரது சடலங்களையும் யாழ்.போதனா

(12ஆம் பக்கம் பார்க்க)

# சாவு அறிவித்தல்

## அமரர்

## திரு. பொன்னையா துரைராச ஜோசப்

நெடுந்தீவு கிழக்கைப்பிறப்பிடமாகவும் இலக்கம் 470 திருநகர், யோகபுரம், மல்லாவியை நிரந்தர வசிப்பிடமாகவும். கொண்ட அமரர் திரு.பொன்னையா துரைராசா ஜோசப் அவர்கள் 24.12.2005 நேற்று சாவடைந்துள்ளார். அன்னார் மரியதிரேஸ் தவமணியின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற பொன்னையா, சின்னம்மா ஆகியோரின் அன்புமகனும், காலஞ்சென்ற மத்தியாஸ் பேனடிற், திருமதி றோசாமுத்து ஆகியோரின் மருமகனும், ஜெசுதனந்தர் (அதிபர் பாலிநகர் மகாவித்தியாலயம்), சுத்தானந்தர் (ஜேர்மன்), அருளானந்தி (ஆசிரியை மல்லாவி மத்திய கல்லூரி), ஞானந்தர் (பிரான்ஸ்), யோகனந்தர் (கனடா), தயானந்தர் ஆகியோரின் அன்புத்தந்தையும் யோகராணி (ஆசிரியை படிவம்04 பாடசாலைவீதி திருநகர்) மரியநாயகம் மலர்விழி (ஜேர்மன்), வாணி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் அருள்மேரி, புஸ்பராணி, இந்திராணி சாந்தகுமாரி ஜீவராசா ஆகியோரின் அன்புச்சகோதரனும் ஆவார். அன்னாரின் நல்லடக்கம் 26.12.2005 திங்கட்கிழமை மாலை 3.00மணிக்கு பூதவுடல் மல்லாவி சேமக்காலையில் நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தகவல்

(6020) **(மகன்ஜெசுதாசன்)**

# 6ஆம் ஆண்டு நினைவலைகள்



பிறப்பு 19 . 10 . 1980

வீரச்சாவு 25 . 12 . 1999

கடற்சிறுத்தைக் கரும்புலி

**மேஜர் நந்தன்**

(தருமராசா-தயாளன்)

29 குமரபுரம்

பரந்தன்

தமிழர் துயர் நீக்க தலைநிமிர்ந்து நின்றாயே
அடிமை விலங்கொடிக்க அண்ணன் வழி
சென்றாயே
தானைத் தலைவன் வழிகாட்டலில்
வீறு நடை போட்டாயே
கரு வேங்கையாக வடிவெடுத்து நின்றாயே
ஓடி மறைந்தது ஆறு ஆண்டுகள்
ஆனாலும் ஓயவில்லை உன நினைவுகள்

இந்நாளில் வீரச்சாவடைந்த கரும்புலி மேஜர்-மீனா, கரும்புலி கப்டன் நாகராணி ஆகியோருக்கும் எமது அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

தகவல்:-
குடும்பத்தினர்

## வரி விளம்பரம்

### புதிய பிரிவுகள் ஆரம்பம்

**Microsoft Front Page**
வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
தொடர்புகட்கு:
வின்நெற் கணனிபயிற்சி நிலையம்
டிப்போவீதி, கிளிநொச்சி.

*(சி-13074)*

### விற்பனைக்குண்டு

5ஆம் கட்டை, அளம்பில் முல்லைத்தீவில் 49 ஏக்கர் தென்னந் தோட்டக்காணி விற்பனைக்குண்டு. தொடர்புக்கு:- காந்திமதி சிதம்பரப்பிள்ளை மே/பா. சி.சிவசுப்பிரமணியம் 5ஆம் வட்டாரம், இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு.

(6967)

# ஓராண்டு நினைவஞ்சலி



பிறப்பு 31 – 05 – 1970

இறப்பு 26 – 12 – 2004

பாலசுப்பிரமணியம்
இரவீந்திரன



பிறப்பு 25 – 11 – 2001

இரவீந்திரன்
திபானி

விண்ணுலகம் சென்றீரோ எமைவிட்டு
மாதங்கள் ஈராறு மறைந்தனவோ
ஆனாலும் ஆறிடுமோ உம் நினைவு
மீண்டுமோர் அவதாரம் கிடைக்காதோ உங்களுக்கு

26.12.2005 திங்கட் கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் மாதியபோசனத்தில் கலந்துகொள்ளுமாறு உறவினர்கள், நண்பர்கள்.அனைவரையும் வேண்டுகின்றோம்

தகவல்
குடும்பத்தினர்,
4ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு

(6972)

**யோகபுரம் சிவன் ஆலயத்தில் காலை நடைபெறும் ஆத்ம சாந்தி பிரார்த்தனையில் அனைத்து மல்லாவிப் பிரதேச மக்களையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.**

**கண்முன் நின்றுலாவிய**
**எம் இனிய உறவுகளே**
**கடல் கொண்டு போன உம்மை**
**கண் சொரிய நினைக்கின்றோம்**
**எத்தனை ஆண்டானாலும்**
**எம் இதயம் உம் நினைவில்**

மல்லாவியில் நடைபெறும்
ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில்
மல்லாவி மக்களை கலந்து கொள்ளுமாறு
கேட்டுக் கொள்கின்றோம்

மல்லாவிப் பிரதேச வர்த்தக சங்கம்,
மல்லாவிப் பிரதேச தொழிச் சங்கம்,
யோகபுரம் சிவனடியார்
பரிபாலன சபை,
மல்லாவி.

# குற்றவாளி என்று தீர்ப்புக் கூறினால் "என்னை சுட்டுக்கொல்லுங்கள்"

## -தூக்கில் போடாதீர்கள்; சதாம் கோரிக்கை

(பாக்தாத்)



**நீதிமன்று என்னைக் குற்றவாளி என்று தீர்ப்புக் கூறினால் என்னைச் சுட்டுக் கொல்லுங்கள். தூக்கில் போடாதீர்கள். நான் எந்தக் குற்றமும் செய்யவில்லை. ஆனால் என்னைத் தண்டிக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். என்னைப் போன்ற ஒரு இராணுவத் தளபதி துப்பாக்கியால் சுட்டுக்கொல்லப் படுவதுதான் சரியான முறையாகும் என்று ஈராக்கின் முன்னாள் சனாதிபதி சதாம் ஹூசைன் நீதிமன்றத்திடம் கேட்டுள்ளார்.**

சன்னி முஸ்லிம் பிரிவைச் சேர்ந்த சதாம் ஹுசைன், ஷியா முஸ்லிம் பிரிவைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட அப்பாவி முஸ்லிம்களைக் கொன்று குவித்ததாகக் கூறி அவர் மீது தனி நீதிமன்றில் வழக்கு நடந்து வருகிறது.

தன் சட்டத்தரணிகளுடன் நீண்ட நேரம் பேசிய சதாம் ஹுசேன் அவர்களிடம் கூறியதாவது;

மரணத்தைக் கண்டு நான் பயப்படவில்லை. ஆனால் என்னைப் போன்ற ஒரு இராணுவத் தளபதி துப்பாக்கியால் சுட்டுக்கொல்லப்படுவது தான் சரியான முறையாகும்.

எப்படி இருந்தாலும் நான் கொல்லப்படத்தான் போகிறேன். என் மரணம் எப்படி நேரப்போகிறது என்பது தான் முக்கியம். என்னைத் தூக்கில் போட வேண்டாம் சுட்டுக் கொல்லுங்கள்.

ஒவ்வொரு மனிதனும் சாகத்தான் போகிறான். நான் எந்தக் குற்றமும் செய்யவில்லை. ஆனால் அவர்கள் என்னைத் தண்டிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள் என்பது எனக்குத் தெரியும்.

மரணத்தைக் காட்டி என்னைப் பயமுறுத்த முடியாது. இந்தச் சதாம் ஹுசைன் செத்துப் போனால் என்ன நூறு சதாம்கள் தோன்றுவார்கள்.

ஈராக்கியர்களுக்காகவும், அரேபியர்களுக்காகவும், உலக மக்கள் அனைவருக்காகவும் நான் அமெரிக்க கொடுங்கோல் ஆட்சியை எதிர்த்துப் போராடினேன்.

உலகத்தையே தன் கீழ் கொண்டு வர வேண்டுமென்ற அமெரிக்காவின் ஆசை ஒருநாளும் நிறைவேறாது.

ஈராக்கைத் தன் கீழ் கொண்டு வர அவர்கள் முயற்சி செய்தார்கள். அதில் அவர்கள் தோல்விதான் அடைவார்கள்.

இன்னொரு நாட்டைத் தாக்குவதற்கு முன்பு அமெரிக்கர்கள் ஆயிரம் முறை யோசிப்பார்கள்.

சதாம் ஹுசைன் தாக்கப்பட்டதாகக் கூறப்படுவதை அமெரிக்கா மறுத்துள்ளது. இதைச் சதாம் ஹுசைன் பொய் என்று கூறியிருக்கிறார். யூதர்களும், அமெரிக்கர்களும் சதாம் ஹுசைனை வெறுக்கிறார்கள். வெள்ளை மாளிகையில் உள்ள அந்த மனிதர் வடி கட்டிய முழுப் பொய்யர். ஈராக்கில் அபாயகரமான ஆயுதங்கள் இருப்பதாக அவர் பொய் கூறினார். பிறகு அவரே ஆயுதங்கள் எதுவும் இல்லை என்று கூறினார், எனவும் குறிப்பிட்டார்.

"அமெரிக்கர்கள் என்னை அடித்து உதைத்ததால் ஏற்பட்ட காயங்களை அமெரிக்கக் குழுவினர் பார்த்து குறித்துக் கொண்டனர். சில காயங்கள் ஆறுவதற்கு எட்டு மாதங்கள் ஆகிவிட்டன" என்றும் சதாம் ஹுசைன் கூறினார்.



தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கில் நத்தார் பண்டிகையை ஒட்டி யானைக்கு நத்தார்பாப்பா உடை அணிவிக்கப் பட்டுள்ளது.



லண்டனில் குயீன் எலிசபெத் அரங்கில் நத்தார் பண்டிகையை முன்னிட்டு நடக்க உள்ள சாகஸ நிகழ்ச்சியில் பங்குபெற பயிற்சியில் ஈடுபட்டுள்ள ரஷ்யக் கலைஞர்.

# சர்வதேச அமைப்புக்களின் பணிகளுக்கு மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் அனுமதி

(காத்மண்டு)

நேபாளத்தில் புனரமைப்புப் பணிகளில் ஈடுபடும் சர்வதேச அமைப்புக்கள் தொடர்ந்து உதவிகளை மேற்கொள்ள அனுமதிக்கப்படுமென மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் அறிவித்துள்ளனர்.

நேபாளத்தில் மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் வன்முறைகளில் ஈடுபட்டு வருகின்றனர். மன்னராட்சியை கடுமையாக எதிர்த்து வருகின்றனர். கடந்த ஒன்பது ஆண்டுகளாக இவர்களது நடவடிக்கைகளால் நேபாளம் கடுமையான பாதிப்புகளை சந்தித்து வருகிறது. தனிநபர் வருமானம் குறைந்து போய்வறுமை தலைதூக்கியுள்ளதால் அங்கு பல சர்வதேச அமைப்புக்கள் பல நிதியுதவி அளிப்பதோடு பாதிக்கப்பட்ட பகுதிகளில் புனரமைப்பு நடவடிக் கைகளையும் மேற்கொண்டது. ஆனால் இதை மாவோயிஸ்ட் தீவிர வாதிகள் கடுமையாக எதிர்த்தனர்.

பல இடங்களில் சர்வதேச அமைப்பு நிர்வாகிகள் தாக்கப்பட்டனர். கடந்த மே மாதம் ஒரு கிராமத்தில் மக்கள் நலப்பணி திட்டங்களை நிறுத்துமாறு கூறி நிர்வாகிகளை அடித்து உதைத்தனர். அத்தோடு தங்களுக்குப் பணம் வழங்க வேண்டுமென்றும் வலியுறுத்தி அட்டகாசம் செய்தனர்.

இந்நிலையில் அரசியல் நெருக்கடி உட்பட பல்வேறு காரணங்களால் தங்கள் நிலையை தற்போது தளர்த்தியுள்ளனர். இது குறித்து இந்த அமைப்பின் தலைவர் பிரசந்தா நேற்று முன்தினம் ஒரு அறிக்கை வெளியிட்டார். அதில் சர்வதேச அமைப்புக்களின் நிதியுதவி மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகளை அனுமதிக்கிறோம். அவ்வாறு உதவிகள் செய்வதில் ஈடுபடும் ஐ.நா. உள்ளிட்ட பல்வேறு சர்வதேச அமைப்புக்களுக்கு எங்கள் இயக்கத்தின் உள்ளூர் நிர்வாகிகள் ஒத்துழைப்பு வழங்குவர். சுகாதாரம் நீர்ப்பாசனம் மற்றும் விவசாயம் போன்ற துறைகளில் உதவியில் ஈடுபடும் ஊழியர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படும். சர்வதேச அமைப்புக்களும் ஆங்காங்குள்ள மாவோயிஸ்ட் நிர்வாகிகளுடன் ஆலோசனை செய்துகொள்ள வேண்டுமென்று கூறியுள்ளார்.

# இந்தியாவுக்கு எதிரான போட்டி எளிதானதாக இருக்காது –இன்சமாம்

இந்தியாவுடனான கிரிக்கெட் தொடர் "ஏதோ பூங்காவில் சென்று நடைப்பயிற்சி மேற்கொள்வது போன்று எளிதாக இருக்காது" என்று பாகிஸ்தான் அணியின் தலைவர் இன்சமாம்-உல்-ஹக் கூறியுள்ளார்.


பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் பயிற்சி முகாம் சனவரி ஏழாம் திகதி தொடங்குகிறது. இதுதொடர்பாக பாகிஸ்தான் கிரிக்கெட் அணித் தலைவர் இன்சமாம்-உல்-ஹக் லாகூரில் வெள்ளிக்கிழமை மேலும் கூறியதாவது;

எமதுஅணியின் பயிற்சியாளர் பொப் உல்மர் கிறிஸ்மஸ் விடுமுறைக்காக தனது தாயகம் சென்றுள்ளார். சனவரி முதல்வாரத்தில் தான் அவர் பாகிஸ்தானுக்குத் திரும்புவார்.

இருப்பினும் அவர் வருவதற்குள் தினசரி கடைப்பிடிக்க வேண்டிய பயிற்சி நிகழ்ச்சி நிரலை தந்துவிட்டுச் சென்றுள்ளார். அதன்படி வீரர்கள் பயிற்சி செய்து வருகின்றனர்.

இந்திய அணியில் மிகச் சிறந்த வீரர்கள் சிலர் உள்ளனர். அவர்கள் ஏராளமான அனுபவத்தைச் சேர்த்து வைத்துள்ளனர். ஆதலால் அண்மையில் நடை பெற்ற போட்டிகளில் இங்கி லாந்தை வெற்றிகொண்டதுபோல் இந்தியாவுடனான போட்டிகளில் எளிதில் வெற்றிபெற்றுவிடலாம் என்று நினைக்க முடியாது.

ஆகவே இந்திய அணியுடனான எமது அணுகுமுறை வித்தியாசமாக இருக்கும். இருப்பினும் இங்கிலாந்துடனான போட்டியில் வீரர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து அணி உணர்வுடன் ஆடியதுபோல் இந்தியாவுக்கு எதிரான ஆட்டங்களிலும் சிறப்பாக செயற்பட்டால் வெற்றிபெறுவது நிச்சயம்.அதேநேரத்தில் இந்திய அணியில் சிறந்த சுழல்பந்து வீச்சாளர்கள் உள்ளதால் அசிரத்தையாக ஆடிவிட முடியாது என்பதை எப்போதும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும் என்றார்.



ஜேர்மனியின் டசெல்டிராப் நகரில், நலநிதி திரட்டுவதற்கான கண்காட்சி கால்பந்து போட்டி நடந்தது. இதில் பிரான்சின் ஜினேடின் ஜிடேன் தலைமையிலான அணி 4-2 என்ற கோல் கணக்கில் பிரேசிலின் ரொனால்டோ தலைமையிலான அணியை வீழ்த்தியது. எதிரணி வீரர்களிடமிருந்து பந்தை இலாவகமாக தட்டிச் செல்கிறார் ஜிடேன் (நடுவில்).

# இந்திய டெஸ்ட் அணியில் மீண்டும் சௌரவ் கங்குலி



அடுத்த மாதம் பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவிருக்கும் இந்திய கிரிக்கெட்டில் 16 பேர் கொண்ட அணியில் முன்னாள் அணித் தலைவர் சௌரவ் கங்குலி இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளார்.

இந்த அணியில் கடந்த மூன்று மாதகாலமாக பங்குபற்றாத வேகப்பந்து வீச்சாளரான சகிர் கானை இணைப்பதுடன் மத்திய வரிசை துடுப்பாட்ட வீரரான மொகமட்கைப்பை நீக்குவதற்கும் தேர்வாளர்கள் தீர்மானித்துள்ளனர்.

கங்குலி அண்மையில் 259 ஓட்டங்களால் வெற்றி பெற்ற சிறிலங்காவுடனான அகமதாபாத் டெஸ்ட்போட்டி அணியிலிருந்து நீக்கப்பட்டமை தெரிந்ததே.

தேர்வாளர் குழுத்தலைவரான கிரண்மோரே இது தொடர்பாக தெரிவிக்கும் போது; பாகிஸ்தான் சுற்றுப்பயணம் சுலபமானதல்ல என்பதால் அனுபவம் வாய்ந்த கங்குலியை தெரிவு செய்ததாகக் கூறியுள்ளார்.

கங்குலி கடந்த 2004ஆம் ஆண்டு பாகிஸ்தானுடனான வரலாற்று சிறப்புமிக்க தொடரை வென்ற அணித்தலைவராவார். எனினும் பயிற்றுநர் சப்பலுடனான கருத்து மோதல்காரணமாக அணித்தலைமைப் பொறுப்பு ராகுல் ராவிட்டிடம் ஒப்படைக்கப்பட்டது.

பாகிஸ்தானுடன் இந்தியா மூன்று டெஸ்ட் மற்றும் ஐந்து ஒருநாள் போட்டிகளில் மோதவுள்ளது. இதில் டெஸ்ட் போட்டிக்கான வீரர்கள் அறிவிக்கப்பட்டுள்ளார்கள்.

அணிவிபரம்:-

ராகுல்ராவிட் (அணித்தலைவர்),விரேந்தர் சேவாக்( உப தலைவர்), சச்சின் டெண்டுல்கர்,சௌரவ் கங்குலி, லக்ஸ்மன், யுவராஜ்சிங், கௌதம்கம்பீர், வசிம் ஜப்பார், இர்பான் பதான், சகிர்கான், அஜித் அகர்கார், ஆர்.பி.சிங்,ஹர்பஜன்சிங், அனில் கும்ளே, மகேந்திரசிங்தோனி, பார்த்திவ்பட்டேல்

## "சமகால அரசியலும் சமூக விழிப்புணர்வும்" மன்னாரில் பரவலாக கருத்தரங்கு

மன்னார் மாவட்டத்தில் கிராம ரீதியாக சமகால அரசியலும் சமூக விழிப்புணர்வும் எனும் தலைப்பில் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடைபெற்று வருகின்றன.

கடந்த புதன்கிழமை வேட்டையா முறிப்புக் கிராமத்திலும் கடந்த வியாழக்கிழமை தாமரைக் குளம் கிராமத்திலும் இக் கருத்தரங்கு நடைபெற்றுள்ளது.

அடம்பன் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் றொபேட் தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டுள்ளனர்.

இந் நிகழ்வில் தமிழீழ தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் மு.சஞ்சய் சிறப்புரை வழங்கினார். மன்னார் நகரப் பகுதி அரசியல் துறைப்பொறுப்பாளர் அ.முடியரசன், தமிழீழ நிர்வாக சேவை மன்னார் மாவட்ட காணிப் பகுதிப் பொறுப்பாளர் ச.இளம்புலி ஆகியோரும் கலந்து கொண்டனர். இக் கருத்தரங்கில் மக்களால் கேட்கப்பட்ட பல சந்தேகங்களுக்கு சஞ்சய் விளக்கமளித்திருந்தார்.

## அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய அலுவலகத்துள் நுழைந்துபடையினர் அடாவடி!

(செட்டிகுளம்)

வவுனியா குருமன் காட்டுப் பகுதியில் உள்ள அனைத்துப் பல்கலைக் கழகங்களின் மாணவர் ஒன்றிய காரியாலயத்தில் நேற்று முன் தினம் மாலை 5.30 மணியளவில் உட்புகுந்த இராணுவத்தினரும் பொலிசாரும் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இந்தச்சோதனை நடவடிக்கையானது தகவல் ஒன்றின் அடிப்படையிலேயே மேற் கொள்ளப்பட்டது என்றும் இங்கிருந்து இராணுவத்தினராலும் பொலிசாராலும் பல பொருட்கள் கைப்பற்றப்பட்டு பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்த இருப்பதாகவும் வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இங்கிருந்து விடுதலைப்புலிகளின் சுவர் ஒட்டிகள் பாடசாலை உடைகள் என்பனவும் கைப்பற்றப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (21)

# சுனாமியால் உயிரிழந்தோர் நினைவாக புதுக்குடியிருப்பில் நினைவாலயம் திறப்பு

## நாளை உணர்வுபூர்வ நினைவு நிகழ்வு

(புதுக்குடியிருப்பு)

**சுனாமியால் உயிரிழந்தோர் நினைவாக புதுக்குடியிருப்பில் நாளை நினைவாலயம் திறந்து வைக்கப்படவுள்ளது. சுனாமி அனர்த்தத்தின் ஓராண்டு நிறைவை முன்னிட்டு உயிரிழந்தோரில் ஒரு பகுதியினரை அடக்கம் செய்துள்ள இடத்தில் இந்த நினைவாலயம் அமைக்கப்பட்டுள்ளது.**

கடந்த வருடம் இடம் பெற்ற சுனாமி அனர்த்தத்தால் முல்லைத்தீவு மாவட்டத்தின் கரையோரப் பகுதிகளில் பலியானவர்களில் புதுக்குடியிருப்பில் அடக்கம் செய்தவர்களுக்கான நினைவாலயத் திறப்பு[illegible], நினைவு நிகழ்வும், நாளை மாலை 3.30 மணிக்கு புதுக்குடியிருப்பில் இடம் பெறவுள்ளது.

புதுக்குடியிருப்பு ஐயனார் கோவிலுக்கு அருகாமையில் சுனாமியின் கோரத்தால் பலியானவர்களில் ஒரு தொகுதி யினரின் உடல்கள் அடக்கம் செய்யப்பட்ட இடத்திலே இவ் நினைவாலயம் அமைக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வானது மிகவும் உணர்வு பூர்வமாக இடம்பெறவுள்ளது என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.(08)

## வாகனவிபத்து 3 பொலிசார் காயம்

(செட்டிகுளம்)

வவுனியா-மன்னார் வீதியில் பொலிசாரின் வாகனம் ஒன்று நேற்று முன்தினம் மரத்துடன் மோதியதில் மூன்று பொலிசார் காயமடைந்துள்ளதாக வவுனியா பொலிசார் தெரிவிக்கின்றனர். வேகமாக சென்ற போது சாலம்பைகுளத்திற்கு அண்மித்த பகுதியிலேயே இந்த சம்பவம் இடம் பெற்றிருப்பதாக பொலிசார் தெரிவிக்கின்றனர் காயமடைந்தவர்கள் உடனடியாக வவு னியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். விபத்திற்குள்ளான வாகனம் பாரம்தூக்கி வாகனத்தின் உதவியுடன் வவுனியாவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. (21)

## மன்னாரில் பயணத் தடை

(மன்னார்)

மன்னார் பேசாலையில் நேற்று முன்தினம் சிறிலங்கா கடற்படையின் மீது நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலின் பின்னர் சிறிலங்கா இராணுவத்தினர் மன்னாருக்கும் பேசாலைக்கும் இடையிலான போக்குவரவைத் தடை செய்தனர். இதன் காரணமாக மன்னாரில் இருந்து பேசாலைக்குச் செல்ல வேண்டிய ஆயிரக்கணக்கான மக்கள் மன்னார் புனித செபஸ்தியார் தேவாலயத்தில் தங்க வைக்கப்பட்டனர். இவர்களுக்குரிய அடிப்படை வசதிகளை மன்னார் பிரதேச செயலர் வழங்கினர். (18)

## வவுனியா பூங்கா வீதியில் கைக்குண்டு மீட்பு

(செட்டிகுளம்)

வவுனியா பூங்கா வீதியில் நேற்று முன்தினம் 1.00 மணியளவில் சிறிலங்கா இராணுவத்தினரால் கைக் குண்டு ஒன்று வெடிக்காத நிலையில் மீட்கப்பட்டுள்ளது. வீதிரோந்தில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் இந்தக் கைக்குண்டை கண்டு உடனடியாக அறிவித்ததை[illegible] அடுத்து இராணுவத்தின் குண்டு, செயல்இழக்கச் செய்யும் படைப்பிரிவைச் சேர்ந்தவர்கள வந்து இந்தக் கைக்குண்டை மீட்டனர்.

வவுனியா பூங்கா வீதியில் அமைந்திருக்கும் விசேட அதிரடிப் படை முகாமில் இருந்து 75 மீற்றரில் இந்தக் கைக்குண்டு எடுக்கப்பட்டுள்ளதுடன் யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகத்தின் கட்டடத்தில் இருந்து பத்து மீற்றர் தொலைவிலும் இந்தக்குண்டு கைப்பற்றப்பட்டுள்ளது.

வழமையாகக் காலையில் விசேட அதிரடிப்படையினர் வீதிச் சோதனையினை நடத்தி வந்தபோதும் அவர்களினால் இந்தக் கைக்குண்டு கண்டு பிடிக்கப்படவில்லை. மண்ணுக்குள் புதையுண்டபடி காணப்பட்ட இந்த குண்டானது புத்தம் புதியது என்று சம்பவஇடத்திற்கு வந்திருந்த இராணுவ அதிகாரி தெரிவித்தார். தற்போது இந்தக் கைக்குண்டு பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## நாளை இரங்கல் கூட்டம்

(முல்லை)

சுனாமியினால் உயிரிழந்த அரச உத்தியோகத்தர்கள் நினைவாக நாளை முல்லை. அரச அதிபர் செயலகத்தில் இரங்கல் கூட்டம் இடம்பெறவுள்ளது. காலை 9.00 மணிக்கு இக்கூட்டம் முல்லை. அரச அதிபர் தலைமையில் இடம் பெறும் எனவும் இந்த நாளினை துக்க நாளாக முல்லைத் தீவு மக்கள் அனுஷ்டிக்கப்பட வேண்டுமெனவும் அன்றைய தினத்தில் மதுபான சாலைகளை மூடி ஒத்துழைப்பு வழங்குமாறும் முல்லை. அரச அதிபர் கேட்டுள்ளார். (20)

## கிளி.மாவட்ட வைத்தியசாலையில் பணியாற்றிய இரு வைத்திய நிபுணர்களுக்கு பிரியாவிடை





(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் பணிபுரிந்த வெளிநாட்டு வைத்திய நிபுணர்களுக்கான பிரிவுபசார வைபவம் கடந்த வியாழக்கிழமையன்று கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் நடைபெற்றது.

கிளி.மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி சிவானந்தன் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் வரவேற்புரையினை டாக்டர் ஜீவா நிகழ்த்தினார். தொடர்ந்து பாராட்டு உரையினை வைத்தியகலாநிதிகள், த.சத்தியமூர்த்தி, எஸ்.பிறைற்றன், டாக்டர் சிதம்பரநாதன், டாக்டர் வாமன்( மருத்துவக்கல்லூரி), வைத்தியசாலை ஊழியர் சச்சிதானந்தம் ஆகியோர் நிகழ்த்தினர்.

அதனைத் தொடர்ந்து பொதுவைத்திய நிபுணர் ஜெயராசா, காது,மூக்கு,தொண்டை வைத்திய நிபுணர் பெஞ்சமின் ஆகியோருக்கான நினைவுப் பரிசில்கள் வைத்தியசாலை வைத்தியர்கள் ஊழியர்கள் சார்பில் வழங்கப்பட்டன.

மேற்படி நிகழ்வில் கிளி.பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் போர்ப்பிரியன், வைத்திய அதிகாரிகள், தாதிகள், வைத்தியசாலை ஊழியர்கள் ஆகியோர் கலந்து நிகழ்வினை சிறப்பித்தனர். (சோ.கு)

# ஒட்டுசுட்டானில் பிரதேச ரீதியில் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் பிரதேச ரீதியான மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

காலை 10.30 மணியளவில் ஒட்டுசுட்டான் இந்து தமிழ்க்கலவன் பாடசாலையில் முல்லை.மாவட்ட ஊடக பேச்சாளர் சி.வேதவனம் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் பொதுச் சுடரினை தமிழீழ மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி ஏற்ற, தேசியக் கொடியினை ஒட்டுசுட்டான் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழரசன் ஏற்றியதைத் தொடந்து மாவீரர்களின் திருவுருவப்படங்களுக்கு சோதியா படையணியைச் சேர்ந்த பொறுப்பாளர்களில் ஒருவரான தர்சிகா, முல்லை. மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் சுடர், மாவீரர் பணிமனை துணைப்பொறுப்பாளர் அர்ச்சனா, ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய அதிபர், முல்லை. மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் ஆகியோர் ஏற்றினர்.

முல்லை. மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர். மயூரன் தமிழீழ மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் ஆகியோர் கருத்துரை வழங்கினார். கடந்த மாதம் கடும் மழை யினால் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் மக்கள் இடம்பெயர்ந்தமையினால் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு இம் மாதம் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. (05)

## பாதிக்கப்பட்ட 24 மீனவருக்கு படகுகள் கையளிப்பு

சுனாமியினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மீனவர்களில் 24 பேருக்கு முல்லை. மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத்தினால் கரித்தாஸ்-பொலண்ட நிறுவனத்தின் அனுசரணையுடன் படகுகள் வழங்கப்பட்டுள்ளன. கடந்த திங்கட்கிழமை முல்லை. மாவட்ட க.தொ.கூ.ச உபதலைவர் இ.தணிகாசலம் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் படகினை சமாசச் செயலாளர் க.பரம சிவம், கரித்தாஸ், நிறுவனத்தைச் சேர்ந்த ரட்ணா மற்றும் பிரதிநிதிகள் வழங்கினர்கள். (20)

## கரடியால் கடியுண்டவர் மருத்துவமனையில்!

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் உள்ள சம்மளங்குளம் கிராமத்தைச் சேர்ந்த ஒருவர் கரடிகடித்து புதுக்குடியிருப்பு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

கடந்த 21 ஆம் திகதி காட்டில் வேட்டைக்குச் சென்ற வேலுப்பிள்ளை சத்தியமூர்த்தி (வயது - 45) என்பவரே கரடி கடித்து காயங்களுக்குள்ளானவர் என்பது குறிப்பிடத்தக்கது (05)

# ஐந்து மீற்றருக்கு ஒரு படையினனை நிறுத்த யாழ். குடாநாட்டில் படைத்தரப்பு முடிவு

(யாழ்ப்பாணம்)

**யாழ். மாவட்டத்தின் பாதுகாப்பு மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அத்துடன் பாதுகாப்பு அமைச்சின் உத்தரவின் பேரில் இம்மாதம் 27 ஆம் திகதி முதல் பாதுகாப்பு நடவடிக்கைகள் இரட்டிப்பாக்கப்படவுள்ளதாகவும், அடிக்கடி மோதல்கள் முறுகல்கள் இடம்பெறும் பகுதிகளில் ஐந்துமீற்றருக்கு ஒரு படையினன் என்ற ரீதியில் குடாநாட்டில் படையினரை நிறுத்தவுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.**

இதேவேளை சுற்றுக்காவல் நடவடிக்கைகளும் நாள் முழுவதும் நடைபெறவுள்ளது. படையினரின் நடவடிக்கைகளைக் கவனிக்கவும், பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் மேற்பார்வை குழுக்கள் அமைக்கப்பட்டு தொடர்கண்காணிப்பும் மேற் கொள்ளப்படவுள்ளது. படையினரின் அனைத்து நட வடிக்கைகளுக்கும் பொலிசாரினதும் ஒத்துழைப்பும் பெறப் படவிருக்கிறது. தேவை ஏற்படும் பட்சத்தில் வான் பரப்பு கண் காணிப்புக்களும் அதிகளவான கடல் ரோந்து நடவடிக்கைகளும் முடுக்கிவிடப்படவுள்ளது.

வீடுகள், கடைகள், பொது இடங்கள் அனைத்திலும் திடீர் சோதனைக்கு உட்படுத்தப்படுவதுடன் ஊர்திச் சோதனைகளும் அதிகரிக்கப்படவுள்ளன. படையினர் மீது தாக்குதல் மேற் கொள் ளப்படும்போது பதில் தாக்குதல் நடத்தவும் உத்தரவு பிறப் பிக்கப்பட்டுள்ளது.

சம்பவங்கள் நடைபெறும் பகுதிகளில் பொதுமக்கள் பெரு மளவில் திரண்டு எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. படையினர் தமது தேவைக்கு ஏற்ப வீதிப் போக்குவரத்து மற்றும் வீதிச் சோதனை நடவடிக்கைகளை மாற்றவும் திட்டமிடப்பட்டுள்ளதாகவும், குடா நாட்டில் முகாம்களின் பாதுகாப்பை உறுதி செய்ய படையினரின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்படும் எனவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (41)

## கைக்குண்டு வீச்சு சிப்பாய் காயம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.வடமராட்சி கரவெட்டி பகுதியில் சிறிலங்கா இராணுவக்காவலரண் ஒன்றின் மீது நேற்று முன்தினம் முற்பகல் கைக்குண்டுத் தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டது. இதில் சிப்பாய் ஒருவர் காயமடைந்தார். இதனையடுத்து இராணுவம் வான் நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியதுடன் வீதியால் சென்ற வர்களையும் தாக்கியது.

இதேவேளை யாழ்.கொடிகாமம் இராமாவில் பகுதியிலுள்ள இராணுவக் காவலரண் ஒன்றின் மீதும் நேற்றுமுன்தினம் காலை கைக்குண்டுத்தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டுள்ளது. இதனை யடுத்து தம் மீது கைக்குண்டை வீசிவிட்டு தப்பியோடியவர்கள் மீது இராணுவம் சுட்டது எனினும் அவர்கள் தப்பிக் கொண்ட தினால் ஆத்திரமடைந்த இராணுவத்தினர் பொதுமக்களைக் கண் மூடித்தனமாக தாக்கினர். (33)

## திடீர் திடீரென வந்திறங்கும் படையினர் பொதுமக்கள் மீது கண் மூடித்தனமான தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்குடாநாட்டிலுள்ள வீதிகள், சந்திகளில் திடீர் திடீரென வந்திறங்கும் இராணுவம் அப்பாவிப் பொது மக்கள் மீது நடத்தும் காட்டு மிராண்டித்தனமான தாக்குதல்களால் வீதிகளில் நட மாடக்கூட மக்கள் அச்சமடைந்துள்ளனர். தமிழ் மக்களைப் பழி வாங்கும் உணர்வுடன் அண்மைக்காலமாக இராணுவம் வீதிகளில் நடமாடும் மக்கள் மீது காட்டுமிராண்டித்தனமாக தாக்கித் துன்புறுத்தி வருகின்றனர்.

இது மட்டுமன்றி பொதுமக்களைப் பாதிக்கும் வகையில் கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகம் மற்றும் தடியடி போன்ற வற்றை நடத்துகின்றனர். இவ்வாறு படையினர் எந்த நேரத்திலும் தம்மீது தாக்குதல் நடத்தலாம் என்ற பீதியினால் மக்கள் வீதியில் கூட நடமாடமுடியாது வீடுகளுக்குள்ளேயே முடங்கிக்கிடக் கின்றனர். அண்மைக்காலமாக படையினரின் இத்தகைய கெடு பிடிகள் இயல்பு வாழ்வை முற்றாகப் பாதித்துள்ளது. (33)

## மில்லரின் நினைவுத்தூபியை சேதப்படுத்த கிளைமோர் தாக்குதல்

### -படையினர் திட்டமிட்ட நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நெல்லியடி மகாவித்தியாலயத்தின் வளாகத்தினுள் உள்ள கரும்புலி கப்டன் மில்லரின் நினைவுத்தூபியைச் சேதப் படுத்தும் நோக்குடன் கடந்த வியாழன் காலை 5.30 மணி யளவில் கிளைமோர் ஒன்று வெடிக்கவைக்கப்பட்டுள்ளது.

மேற்படி பாடசாலைக்கு முன்பாக உள்ள மரம் ஒன்றில் பொருத்தியிருந்தே இராணுவம் இக்கிளைமோர் குண்டை வேண்டுமென்று வெடிக்க வைத்தனர். இதில் நெல்லியடி மகாவித்தியாலயக் கட்டடம் சேதமானது. இதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது. (33)

## யாழ்.மாவட்ட கிராம அலுவலர்களின் இடமாற்றம் தொழிற்சங்கம் ஒன்றின் பழி வாங்கும் நடவடிக்கை

### யாழ். மாவட்ட கிராம அலுவலர்கள் தெரிவிப்பு

யாழ். மாவட்ட கிராம அலு வலர்களின் இடமாற்றம் கிராம அலு வலர்களின் தொழிற்சங்கம் ஒன்றின் பழி வாங்கல்களுக்கும், உள்ளாக் கப்பட்டே மேற்கொள்ளப்பட்டதாக கிராம அலுவலர்கள் கருத்துத் தெரி விக்கின்றார்கள்.

கடந்த இரண்டு வருட காலத் தில் உருவாக்கப்பட்ட தொழிற் சங்கம் தனது அங்கத்தவர்களாக சேரமறுத்த கிராம அலுவலர்களை பழிவாங்கும் நடவடிக்கையாக அரச மேலதிகாரிகளின் உதவியுடன் செய்துள்ளதாக பாதிக்கப்பட்ட கிராம அலு வலர்கள் தெரிவிக்கின்றார்கள்.

50 வயது பூர்த்தி அடைந்தவர்கள் இடமாற்றத்திற்கு உள்ளாக்கப்பட மாட்டார்கள் என ஆரம்பத்தில் தெரி விக்கப்பட்டதுடன் பத்து வருட பூர்த்தி செய்யாதவர்களும் கூட குறிப்பிட்ட பிரதேச செயலகம் ஒன்றில் இருந்து மட்டும் இடமாற்றத்திற்கு உள்ளா கியுள்ளதாக செயலக வட்டாரங் களில் இருந்து அறியக்கூடியதாக இருக்கின்றது.

இதே போன்று உயர் அதிகாரி ஒருவரின் கணவன் மிகவும் வச தியான இடத்தில் கடமையாற்றி மீண்டும் அரச உயர் அதிகாரிகளின் ஆதரவுடன் யாழ். நகரப் பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும், கிராம அலுவலர்கள் தெரிவிக் கின்றார்கள்.

இதேபோன்று குற்றம் சாட்டப் பட்டு குறிப்பிட்ட ஒரு சில மாதங்க ளுக்கு மட்டும் இடமாற்றம் பெற்று மீண்டும் அரசியல் செல்வாக்கு காரணமாக பழைய இடத்திற்கு வந்த வர்களும், குறிப்பிட்ட தொழிற் சங்கத்தின் ஆசியுடன் இடமாற்றம் இன்றி இருப்பதாகவும், கூறப்படுகின் றது.

குறிப்பிட்ட தொழிற்சங்கத்தில் இணைந்தவர்கள் மட்டும் திட்டமிட்ட முறையில் பழிவாங்கல்களுக்கு உட் படுத்தப்பட்டுள்ளதாக கிராம அலு வலர்கள் கூறுகின்றார்கள். (41)

### புதிய காலத்தை எதிர்கொள்வோம்

## திரைப்பட மொழி பெயர்ப்பு பிரிவின் சிறப்புப் பயிற்சிப் பட்டறை



திரைப்பட மொழிபெயர்ப்புப் பிரிவினரால் ரதன் கலையகம் முல்லைத்தீவு பணிமனையில் புதிய காலத்தை எதிர்கொள்வோம் என்ற தலைப்பில் கிளிநொச்சி, முல்லைத்தீவு பணியாளர்களுக்கான சிறப்புப் பயிற்சிப்பட்டறை கடந்த 21,22,23ஆம் திகதிகளில் நடத்தப்பட்டது.

முதல் நாள் நிகழ்வுகள் காலை 8.30 மணிக்கு இத் துறையின் சிறப்புப் பொறுப்பாளர் துளசிச்செல்வன் தலைமையில் ஆரம்பமானது.

தமிழீழ தேசியக் கொடியினை விடுதலைப்புலிகளின் மூத்த தளபதி பொட்டு அம்மான் ஏற்றினார். மாவீரர் நினைவுச் சுடரினை புலிகளின் குரல் பணிப்பாளர் தமிழன் பன் ஏற்றினார். தொடர்ந்து சிறப்புரையினை மூத்த தளபதி பொட்டு அம்மான் நிகழ்த்தினார். தொடர்ந்து புலிகளின் குரல் வானொலிப் பணிப்பாளர் தமிழன்பன் போராளிகள் கார்நிலவன் வில்லவன் ஆகியோர் பயிற்சிகளை வழங்கி னார்கள்.

இரண்டாம் நாள் நிகழ்வுகாலை 8.30 மணிக்கு ஆரம்ப மானது. பொதுச் சுடரினை நாகரத்தினம் அவர்கள் ஏற்றினார். தமிழீழத் தேசியக்கொடியினை திரைப்பட மொழியாக்கப் பிரிவுப் பதில்பொறுப்பாளர் கலையழகன் ஏற்றினார் மாவீர் நினை வான ஈகச் சுடரினை மகேஸ் அவர்கள் ஏற்றினார். தொடர்ந்து தாயவன் அரசறிவியற் கல்லூரி [illegible] பார்த்திபன், போராளிகலைக்கோன் திரைப்பட [illegible] பொறுப்பாளர் ராதா, விடுதலைப்புலி களின் முக்கிய உறுப்பினர் க.வே பாலகுமாரன் ஆகியோர் கருத்துக்களை வழங்கினார்கள். மூன்றாம் நாள் காலை 8.30 மணிக்கு ஆரம்ப நிகழ்வில் பொதுச்சுடரினை முழு நேரப்பணியாளர் அசோக்குமார் ஏற்றினார்.தமிழீழ தேசியக்கொடியினை தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் ஏற்றினார். மாவீரர் [illegible] நினைவுச் சுடரினை முழு நேரமாக குரல் வழங்கி வரும் ச.சகீலா ஏற்றினார். தொடர்ந்து சிறப்புரையினை காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் வழங்கினார் கருத்துரைகளை போராளி நரேஸ் வழங்கினார். தொடர்ந்து இரவு 8.00 மணிக்கு மூன்று அணிகள் கலந்து கொண்ட பொது அறிவுப் போட்டி நிகழ்வும் நடைபெற்றது. (20)

## எமது தாயக பிரதேசங்கள் முழுமை பெற அரசியலில் ஸ்திர நிலை உருவாக வேண்டும்

### ஒட்டுசுட்டானில் வைத்திய கலாநிதி ஜெயக்குலராஜா

(அலுவலக செய்தியாளர்)

எமது தாயகப் பிரதேசங்களை முழுமையாக நாங்கள் கட்டியெழுப்ப வேண்டுமாக இருந்தால் இந்த அரசிய லில் ஒரு ஸ்திரமான நிலை நிச்சய மாக உருவாக்கப்பட்டால் மாத்திரமே அவை முழுமையாக நடைபெறு மென முல்லைத்தீவு பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஜெயக்குலராஜா தெரிவித்துள்ளார்.

நேற்று ஒட்டுசுட்டான் மத்திய மருந்தகத்தைச் சம்பிரதாய பூர்வமாக திறந்து வைத்து உரையாற்று கையிலேயே அவர் இதனைத் தெரி வித்தார்.

மேலும் அவர் கூறுகையில் இரு தசாப்தங்களாக யுத்தத்தினால் முழு மையாக அழிந்த இப் பிரதேசம் பின்னர் சுனாமி என்ற இயற்கைப் பேரழிவுகளால் அழிக்கப்பட்டு தொடர்ந்து வெள்ளத்தினால் பாதிப்படைந்து தொடர்ந்து வரும் தாழ முக்கங்கள் அடுத்தடுத்து வரும் தாக்கங்களினால் பாதிக்கப்பட்டு அழிந்துபோன எங்கள் தாயகப் பகுதிகள் இவற்றிலிருந்தெல்லாம் விடுப்பட மீண்டும் கட்டியெ ழுப்பப்பட வேண்டுமாக இருந்தால் அரசியலில் ஸ்திரமான நிலை ஏற் பட்டால் மாத்திரமே செய்து முடிக் கலாம் எனத் தெரிவித்தார்.

வைத்தியர் மகேந்திரன் தலை மையில் நடைபெற்ற இந் நிகழ்வில் மருந்தகத்தின் பெயர்ப்பலகையினை உதவி அரசாங்க அதிபர் செல்வி



சுபாசினி கந்தையா திரைநீக்கம் செய்து வைத்தார்.

தொடர்ந்து பிரதான கட்டடத் தினை முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப் பாளர் வைத்திய கலாநிதி ஜெயக் குல ராஜா நாடாவினை வெட்டித் திறந்து வைத்தார்.

மேற்படி நிகழ்வில் வைத்தி யசாலை வைத்தியர்கள், ஊழியர்கள் கல்வித்துறை சார்ந்த அதிகாரிகள், கற்சிலைமடு திலீபன் மருத் துவமனை வைத்தியர் அப்பிரதேச மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (தீ.கு)

## முனைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் 18 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு

(அலுவலக செய்தியாளர்)

ஈழத்தமிழருக்காக உலகின் முதன் முதல் உரிமைக்குரல் கொடுத் தவரும், தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ஆக்கமும் ஊக்க மும் கொடுத்த செயல் வீரருமான மக்கள் திலகம் பொன்மனச் செம்மல், தமிழக முன்னாள் முதல்வர், முனை வர் எம்.ஜி.ஆர் அவர்களின் 18 ஆம் ஆண்டு நினைவு நாள் நேற்று புத்தூர் பகுதிகளிலும்,சாவகச்சேரி உதய சூரியன் ச.ச நிலைய திறந்த வெளி யரங்கிலும் தென்மராட்சி எம்.ஜி.ஆர் முன்னேற்றக் கழகத்தலைவர் கமலேந்திரராசா தலைமையிலும் நடை பெற்றது. மேற்படி நிகழ்வு இன்று குமுக்குளம் வட்டுக்கோட்டை அப்பர் விளையாட்டு மைதான அரங்கில் வட்டுக்கோட்டை பிரதேச எம்.ஜி.ஆர் முன்னேற்றக் கழகத் தலைவர் எஸ்.ஈழதாசன் தலைமையிலும், 26 ஆம் திகதியன்று பண்டத்தரிப்பு சில்லாலை,சாந்தை விநாயகர் ச.ச.நிலைய திறந்தவெளி அரங்கி லும் பண்டத்தரிப்பு பிரதேச எம்ஜி.ஆர் முன்னேற்றக்கழகத் தலைவர் வை.தவக்குமார் தலைமையின் நடைபெறவுள்ளது.

நாளை மறுதினம் செவ்வாய் க.இராசன் தலைமையில் தச்சடம்பன் மாங்குளம் பகுதியிலும்,மாமூலை முள்ளியவளை கழகத்தலைவர் க.தனேஸ்வரன் தலைமையில் மாமூலைப்பகுதிகளிலும்,கிளிநொச்சி மாவட்ட எம்.ஜி.ஆர் முன்னேற்றக் கழ கத்தலைவர் நா.வேலாயுதம் தலை மையில் கிளிநொச்சி நகரப்பகுதி களிலும் நடைபெற ஏற்பாடாகியுள் ளது. (சோ)

# மகிந்தவை வெற்றிபெறச் செய்தமைக்கு ஜே.வி.பி எதிர்பார்க்கும் பரிசு!

அடுத்து நடக்கவிருக்கும் பொதுத் தேர்தலில் தனக்கு 55 ஆசனங்களை ஒதுக்கித் தரவேண்டும் என ஜே.வி.பி கேட்டுள்ளதாகவும் உள்ளூராட்சித் தேர்தலில் 50 வீதமான உறுப்பினர்களைத் தமக்கு ஒதுக்க வேண்டும் எனவும் அது கோரிக்கை விட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சனாதிபதித் தேர்தலில் தனது வெற்றிக்கு ஜே.வி.பியே காரணம் என்று மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ள நிலையில் அதற்குப் பரிசு கேட்க ஜே.வி.பி தயாராகிவிட்டதையே இக்கோரிக்கை வெளிப்படுத்துகின்றது.

இப்பொழுது மகிந்தராஜபக்ஷ அமைத்துள்ள அமைச்சரவை

இந்த விடயத்தில் விவசாயம் குறித்த திட்டமிடல் ஒரு அமைச்சரிடமும் விவசாயத்திணைக்களம் ஒரு அமைச்சரிடமும் உர விநியோகம் மற்றுமொரு அமைச்சரிடமும் இருப்பதை ஜே.வி.பி கிண்டல் செய்துள்ளது.

ஆனால் ஜே.வி.பி இக்கருத்தினை உரமானியத்திட்டம் அறிவிக்கப்பட்டு அது சரிவரச் செயற்படவில்லை, அதில் முறைகேடுகள் இடம்பெறுகின்றன, மானியத்தில் வழங்கப்படும் உரம் கூடுதல் விலைக்கு வெளியே விற்கப்படுகிறது என்ற முறைப்பாடுகள் வெளிவந்த பிறகே தெரிவிக்க ஆரம்பித்திருக்கின்றது.

இதேவேளை சமாதானப் பேச்சு ஏற்பாட்டாளர் என இவர்கள் கூறி வந்தனர்.

மகிந்த ராஜபக்ஷ தான் பதவியேற்றதும் நோர்வேயின் ஏற்பாட்டாளர் பங்கை ஒதுக்கிவிடுவதற்காக இந்தியாவை நோக்கி ஏற்பாட்டாளராகச் செயற்படுமாறு கோரிக்கை விடுத்தார். ஆனால் அது இந்தியாவால் நிராகரிக்கப்பட்டுவிட்டது. இது மகிந்த ராஜபக்ஷவுக்கு ஒருபுறம் கவலையளித்தாலும்ஒருபுறத்தில்ஜே.வி.பி க்கும் மகிந்தவுக்கும் ஆறுதலளிக்கும் விடயமாகக்கூட இருந்திருக்கக்கூடும்.

ஏனெனில் இப்பொழுது நோர்வேயை இவ்விடயத்தில் விலக்க முயற்சிப்பதுபோல, இந்தியா ஏற்பாட்டாளர் பாத்திரத்தை ஏற்க முன் வந்தால் பின்னர் அதனை விலக்கு திலிருந்து ஆசியப் பிராந்தியத்திற்குள் கொண்டுவருவது அவரது திட்டமாக இருக்கின்றது.

அத்துடன் விடு தலைப் புலிகளைத் தனிமைப்படுத்துவது அதாவது பிராந்திய நாடுகள் உட்பட சர்வதேசத்தி டமிருந்து தனிமைப் படுத்துவது அவரது திட்டமாக இருக்கின்றது. இதனடிப்படையில் இராஜதந்திரிகள் கிளிநொச்சி வருவது தடுக்கப்பட்டிருக்கிறது. எனினும் நேற்று சிலரை வர அனுமதித்திருப்பது அவருக்கு ஏதாவது இலாபம் கிடைக்கும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் அமைந்திருக்கலாம்.

இவ்வாறு கருத்தொருமைப்பாடு மகிந்தவுக்கும் ஜே.வி.பி க்கும் பொறுப்பேற்காது விடுவதற்கான நடவடிக்கைகளில் ஜே.வி.பி ஈடுப வருகின்றது.

ஆனால் மகிந்தவை பதவியில் இருத்தியதற்கான பரிசிலையும் அது தவறவிடத் தயாரில்லை.

பாராளுமன்றத்தில் உறுதியான ஒரு பெரும்பான்மையைப் பெற விரைவில் ஒரு பொதுத்தேர்தலை நடத்த மகிந்த விருப்பம் கொண்டிருந்ததாகவும் ஆனால் ஜே.வி.பி அதனை விரும்பவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

விரைவில் பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்றால் ஜே.வி.பி 39 ஆசனங்களைப் பெறத்தக்க வகையில் இருக்குமா? என்ற விடயத்தில் மேலும் அத்துடன் பாராளுமன்றத்தை கைப்பிடிக்குள் வைத்திருக்க முடியுமா? என்பதிலும் ஜே.வி.பி சந்தேகம் கொண்டிருக்கலாம்.

எனவே பொதுத் தேர்தலை விரைவில் நடத்தாதிருக்க ஒரு உத்தியாகவும் நடத்தினால் இதனைவிட சிறிதளவாவது கூடிய ஆசனங்களைப் பெறுவதற்காகவும் 55 ஆசனங்களை ஜே.வி.பி கோருகிறது. ஆனால் ஜே.வி.பி யின் பலத்திற்கு 39 ஆசனங்களே மிகமிக அதிகம் என்பது சிறிலங்கா

குறித்து ஜே.வி.பி கடுமையான விமர்சனங்களை முன்வைத்து வருகின்றது. அதாவது அதிக எண்ணிக்கையானோர் கொண்ட அமைச்சரவை எனவும் ஆளும் கட்சியின் அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களாக இருப்பதாகவும் அது கூறி வருகின்றது.

இதனை அது பாராளுமன்றத்தில் கூட பல்வேறு வடிவங்களில் கூறி விட்டது.

அதாவது அமைச்சுப்பதவிகளுக்குப் போட்டியிடும் ஆளும் கட்சியினர் பாராளுமன்றத்திற்கு வருவதற்கு தவறி வருகின்றனர் என்ற ரீதியில் கூட அது தெரிவிததிருக்கிறது.

வார்த்தைகளில் இந்தியாவின் பங்கு பணிபற்றியும் மகிந்தவை இழுத்துப் பிடிக்கும் கருத்துகளையும் செயற்பாடுகளையும் ஜே.வி.பி ஆரம்பித்து விட்டது. அதாவது இதிலும் தனது இழுத்துப் பிடிக்கும் செயற்பாடுகளை ஆரம்பித்துவிட்டது.

முதலாவதாக மகிந்த ராஜபக்ஷ தனது இந்திய விஜயத்தின்போது தம்முடன் ஜே.வி.பி குழு ஒன்றை அனுப்பிவைக்குமாறு விடுத்த கோரிக்கையை அது நிராகரித்து விட்டது. இதற்கு இந்தியா ஜே.வி.பி மீது சில அழுத்தங்களைப் பிரயோகிக்கலாம் என்று அதற்கு உள்ள அச்சமும் காரணமாக இருக்கலாம். மகிந்தராஜபக்ஷ சனாதிபதியா வது சுலபமானதாக இருக்க முடியாது.

அத்துடன் நோர்வே புலிகளுக்குச் சார்பானது இந்தியா எதிரானது என்ற எடுகோளின் அடிப்படையில் நோர்வேயை விலக்கிவிட்டு இந்தியாவை இம்முயற்சியில் கொண்டுவர அவர்கள் முயன்றாலும் இந்தியாவையும் பூரணமாக விரும்பவில்லை என்பதையும் ஜே.வி.பி வெளிப்படுத்தியிருக்கிறது.

அதாவது இவ்விடயத்தில் இந்தியாவை அதிகம் ஈடுபடுத்தக் கூடாது கறிவேப்பிலைபோல உபயோகித்துவிட்டு எடுத்து வீசிவிட வேண்டும் என ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் மகிந்த ராஜபக்ஷவுக்கு அறிவுரை கூறியிருக்கிறார்.

எமது நாட்டின் பிரச்சினையை எமது நாட்டிலேயே தீர்க்க வேண்டும். போதியளவு சர்வதேசமயமாக்கப் பட்டுவிட்ட பிரச்சினையை மேலும் சர்வதேச மயமாக்கக்கூடாது என்பது ஜே.வி.பி யின் கருத்தாகும்.



ஜே.வி.பி தலைவருடன் மகிந்த

இடையில் காணப்படுகின்றபோதும் மகிந்தவுடன் ஜே.வி.பி யினர் இந்தியாவுக்குச் செல்ல மறுத்திருப்பதன் காரணம் இந்தியாவை இவ்விவகாரத்துக்குள் இழுத்து விட்டாலும் அதனைத் தூர வைத்திருக்க விரும்புவது காரணமாக இருக்கலாம்.

சுதந்திரக்கட்சியினரின் கருத்தாகும். அவ்வாறாயின் இப்பிரச்சினையிலிருந்து விடுபட தேர்தலை விரைவில் நடத்துவதை மகிந்த ராஜபக்ஷ தவிர்க்கக்கூடும்.

ஆனால் தேர்தலை தள்ளிப் போடுவதுகூட ஜே.வி.பி க்கு இலாபகரமானதாக இராது. ஏனெனில் தேர்தலில் தன்னை ஜே.வி.பி வெற்றிபெற வைத்தமை குறித்த நன்றி உணர்வு மகிந்தவிடம் மங்கிப்போகமுன் பொதுத் தேர்தல் நடக்குமாயின் ஜே.வி.பி இலாபமடையலாம். ஆனால் காலந்தள்ளிப் போக ஜே.வி.பி கொடுக்கும் தொல்லைகளால் மகிந்தவுக்கு அந்த உணர்வு மங்கிப்போக வாய்ப்பு உண்டு. அத்துடன் காலஞ்செல்லச் செல்ல வழமையான கூட்டாளிகளை - அதாவது அதிக அழுத்தம் பிரயோகிக்காத கூட்டாளிகளை நோக்கி மகிந்த தள்ளப்படலாம்.



ஜாதிக ஹெல உறுமயவுடன் மகிந்த

அதேவேளை மகிந்த சிந்தனையின் அடிப்படையில் தற்போது அமுலாக்கப்படுவதாகக் கூறப்படும் உரமானியம் அதாவது உரத்தை 350 ரூபாவுக்கு வழங்கும் நடைமுறையை ஜே.வி.பி குறைகூறுகிறது. இத்திட்டத்தை அவசரப்பட்டு நடைமுறைப் படுத்தினால் அது ஊழல், முறைகேடுகளுக்கே வழிவகுமெனத் தாங்கள் கூறியதாகவும் ஆனால் ஆளும் தரப்பினர் அதனைக் கேட்கவில்லை என்றும் ஜே.வி.பி கூறுகிறது.

வதை இந்தியா விரும்பவில்லை என்றும் அதிலும்ஜே.வி.பி ஜாதிக ஹெல உறுமய போன்ற தீவிரவாத சக்திகளின் ஆதரவுடன் மகிந்த வெற்றி பெறுவதை அது விரும்ப வில்லை என்றும் கருத்து நிலவி வந்தது.

அந்நிலையில் இலங்கை இனப் பிரச்சினை விடயத்தில் இந்தியாவின் பங்களிப்பு குறித்து மகிந்தவும் ஜே.வி.பி யும் தீவிரமாகப்பேசத் தொடங்கினர். மேற்குலக நாடுகளை விட இந்தியா பொருத்தமான

சனாதிபதி மகிந்தவும் அவ்வாறான எண்ணத்தைக் கொண்டவராகவே இருக்கிறார். அவர் மேற்குலகோடு தொடர்புபட்டு இப்பிரச்சினை தொடர்பான பேச்சுக்களை நடத்துவதை "நீண்டநாட்கள் மேற்குலகிற்கு அடிமைப்பட்டுக் கிடந்ததன் விளைவு" என விமர்சிக்கிறார்.

இவர்கள் எவரதும் அனுசரணையில்லாது நேரடியாக தேசியத் தலைவர் அவர்களைச் சந்திப்பது குறித்தே அவர் அடிக்கடி பேசி வருகின்றார்.

எனினும் இப்போதைக்கு இனப்பிரச்சினையை சர்வதேசத்

அத்துடன் இந்தியாவை இவ்விவகாரத்துக்குள் இழுத்துவிட மகிந்தவால் முடியுமா? முடியாதா? என்பது ஒருபுறமிருக்க இதனால் ஏற்படக்கூடிய விளைவுகளுக்குப் பொறுப்பேற்க ஜே.வி.பி க்கு விருப்பமில்லை. அல்லது துணிவில்லை என்பதே காரணமாகும்.

இப்பொழுது ஜே.வி.பி இந்தியாவுக்கு மகிந்த புறப்படும் வேளையில் இந்தியாவை எவ்வாறு உபயோகிக்கவேண்டும் என்பதற்கு மட்டும் ஆலோசனை கூறியிருக்கிறது.

எனவே உரவிவகாரம், அமைச்சரவை, இனப்பிரச்சினை என்பவற்றில் அவற்றால் கிடைக்கக்கூடிய பயன்களை அனுபவித்துக்கொண்டு

வேலவன்

# எதிர்க்கட்சிகளின் விமர்சனத்திற்குள்ளான அமைச்சுக்களில் விரைவில் மாற்றம்

**- அலரிமாளிகை வட்டாரங்கள் தகவல்**

(கொழும்பு)

இம்முறை வரவு செலவுத்திட்டத்தின் பொழுது எதிர்க்கட்சியினரின் விமர்சனத்திற்குள்ளான சில அமைச்சுக்களில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு சனாதிபதி தீர்மானம் எடுத்திருப்பதாக அலரிமாளிகை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சில அமைச்சுக்களின் பொறுப்புக்கள் வேறு அமைச்சுக்கு மாற்றும்பொழுது அமைச்சர்களுக்கு தங்களின் அமைச்சுக்களின் பொறுப்புக்களை நிறைவேற்ற முடியாமலுள்ளதென சில அமைச்சர்கள் சனாதிபதிக்கு தெரிவித்துள்ளனர்.

அமைச்சர்கள் தங்களின் அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்று ஒருமாதம் கடந்துள்ளதுடன் மகிந்த சிந்தனைகள் நிறைவேற்றுவதில் சில சிரமங்கள் ஏற்பட்டுள்ளதென சில அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர்.

# பிரமுக தனியார் வங்கியை அரசு கையேற்க முடிவு

(கொழும்பு)

முறைகேடுகள் தொடர்பாக கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் மூடப்பட்ட பிரமுக தனியார் வங்கியை எதிர்வரும் சனவரி மாதம் 31ஆம்திகதிக்குமுன்னர் அரசுவங்கியாக மீண்டும்திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் படுமென அரச வங்கி அபிவிருத்தி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ சபையில் தெரிவித்துள்ளார். பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான வாய்மூல கேள்வி நேரத்தின் போது ஜாதிக ஹெல உறுமயவின் அத்துரலிய ரத்ன தேரர் எழுப்பியகேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அந்தக் கேள்விக்கு அமைச்சர் மேலும் பதிலளிக்கையில் கூறியதாவது. 2003 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் மூடப்பட்ட இந்த வங்கி தொடர்பாக நீதி மன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த வங்கியை அரசாங்கம் பொறுப்பேற்று அரசவங்கியாக திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பிரமுகவங்கி மூடப்பட்டதால் வாடிக்கையாளர்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றார்.

# அச்சுறுத்தல், இராணுவ மேலாதிக்கத்திற்கு தமிழர்கள் தலைகுனியப் போவதில்லை

*-பளைப்பிரதேச மகளிர் அமைப்புக்களின் ஒன்றியம்*



முகமாலையில் நடைபெற்ற பேரணி

அச்சுறுத்தல், இராணுவ மேலாதிக்கம் என்பவற்றுக்கு தமிழர்கள் ஒருபோதும் தலைகுனியப்போவதில்லை என்பதை சிறிலங்காவும் சர்வேதசச் சமூகமும் புரிந்து கொள்ளவேண்டும் இவ்வாறு பளைப் பிரதேசமகளிர் அமைப்புக்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் காலை 10.45மணியளவில் முகமாலையில் மகளிர் அமைப்புக்களினால் கண்டன ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது. இத்தாவில் சந்தியிலிருந்து முகமாலையில் அமைந்துள்ள ஐ.சி.ஆர்.சி அலுவலகம் நோக்கி இராணுவத் திற்கெதிரான கோசங்களை எழுப்பியவாறு சென்றவர்கள் ஐ.சி.ஆர்.சி அலுவலகத்தில் கண்டன மகஜர் ஒன்றை கையளித்துள்ளனர்.

இம் மகஜரினை பளைக்கோட்ட மகளிர் சங்கங்களின் ஒன்றியத் தலைவி செல்வி சுபாசினி யாழ்.மாவட்ட ஐ.சி.ஆர்.சி தலைமையதிகாரி மார்க்கேவ் அவர்களிடமும் சிறி லங்கா சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கான மகஜரினை பச் சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் ச.சிவசிறியிடமும் கை யளித்தார். அம் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

சிங்கள இனவாதப் படைகளினால் தமிழ் பேசும் மக்களுக்கு பாதுகாப்பு இல்லையென்பதும் சிங்களப்படைகள் எமது தாயகத்தை ஆக்கிரமித்துள்ள அந்நியப்படைகள்தான் என்ப தனையும் நிரூபிக்கும் மற்றுமொரு கோர நிகழ்வு புங்குடுதீவுப் பகுதியில் அரங்கேறியுள்ளது. தன்னுடைய சொந்தக்கிராமத்தில் தனியே சென்ற இந்த அப்பாவிப் பெண்ணுக்கு நிகழ்ந்த பாலியல் வல்லுறவும் அதனை மறைக்க செய்யப்பட்ட படுகொலையும் தமிழ் மக்களின் பாதுகாப்பிற்கு சிங்களப்படைகள் ஒருபோதும் பொறுப்பானவர்கள்அல்ல என்பதனையும் சிங்களப்படைகளினால் திட்டமிட்ட வகையில் செய்யப்பட்டு வரும் தமிழர் தாயகத்தின் மீதான இன ஒழிப்பு நடவடிக்கையின் ஒரு அங்கமான செயற் பாடே இது என்பதும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஐந்து தசாப்தங்களாக தமிழர் தாயகத்தில் நிகழ்ந்து வரும் இந்த இனரீதியான வன்முறைகள் சர்வதேச தலை யீட்டுடனான சமாதான முயற்சிகளின்பேரால் நிறுவப்பட்ட சமாதானகாலத்தில் அதுவும் குறிப்பாக தமிழர்களின் வடபுல தலைநகரான யாழ்ப்பாணத்தில் சிங்களப்படைகளின் கட்டுப் பாட்டிலுள்ள ஒரு பிரதேசத்தில் நிகழ்ந்த இந்தக் கோரநிகழ்விற்கு சிறிலங்கா அரசு பொறுப்பேற்றே ஆகவேண்டும். தனது படைகளின் அராஜகத்தையும் காம வெறியையும் கண்டும் காணாத நிலையில் அதனை ஊக்குவிப்பது போல அறிக்கைகளையும் வெளியிட்டு வக்காலத்து வாங்குவதென்பது இனப் படுகொலைக்கும் இன ஒதுக்குதலுக்குமான பேரினவாத நிலையை அடிப்படையாக கொண்டது என்பதனை சர்வதேச சமூகம் புரிந்து கொள்ள வேண்டிய ஒரு செய்தியாகும்.

இலங்கையின் இனப்பிரச்சினையிலும் சமாதான முயற்சி களிலும் பெரிதும் அக்கறை கொண்டு செயற்படும் இணைத் தலைமை நாடுகளும் அனுசரணையாளர்களும் மிக மோசமான மனித உரிமை மீறல் சம்பவமான இப்படிப்பட்ட சிறிலங்கா படைகளின் பாலியல் வல்லுறவுப் படுகொலைகளைக் கண்டிக்க முன்வரவேண்டும். அரச இயந்திரம் என்ற அங்கீகாரத்துடன் சிறிலங்கா அரசபடைகள் குடாநாட்டில் மேற்கொண்டுள்ள பொதுமக்கள் மீதான அடாவடித்தனங்களால் எமது தாயகத்தில் நிலவிவரும் போர் நிறுத்தமும் புரிந்துணர்வு உடன்படிக்கையும் கூட கேள்விக்குள்ளாகி மிக மோசமான கட்டத்தை அடைவதற்கு இப்படியான அடிப்படை மனித உரிமைமீறல் சம்பவங்கள் காரணமாகி வருகின்றன.

உலகெங்கணும் மனிதஉரிமை மனித கௌரவம் பற்றி அதிகம் அக்கறை கொண்டுள்ள நாடுகள் இவ்வகையான மிக மோசமான மனித உரிமை மீறல் சம்பவங்களை செய்துவரும் சிறிலங்கா அரசிற்கு மேலும் உதவிகள் வழங்குவதனை நிறுத்த முன்வரவேண்டும் என நாம் கோரி நிற்கின்றோம். அது மாத்திர மன்றி சிறிலங்கா அரசினால் திட்டமிட்டு உருவாக்கப்பட்டுள்ள ஒட்டுப்படைகளென்னும் ஆயுதக்குழுக்களை கொண்டு அரச படைகள் மேற்கொள்ளும் படுகொலைகளும் மக்களின் மீது நிகழ்த்தப்படும் அடாவடித்தனங்களுந்தான் சமாதான சூழலை குழப்பும் மிகப் பிரதான காரணங்களாக இருந்து வந்த நிலையினைத் தொடர்ந்து அரச படைகளே நேரடியாக அப்பாவி மக்கள் மீது கொலைகளையும் பாலியல் வல்லுறவுகளையும் செய்யத்தொடங்கியுள்ளமை எமது தாயகத்தில் சமாதானச் சூழல் அரச படைகளால் குழப்பப்படுகிறது என்பதனையே உணர்த் துகிறது.

இவ்வாறான சமாதானத்திற் கெதிரான அரசின் நிலைப் பாட்டை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். குடாநாட்டில் பெண்களுக்கு எதிராக நிகழ்த்தப்படும் வன்முறைகளும் அப்பாவி பொதுமக்களுக்கு எதிரான கண்மூடித்தனமான தாக்குதல்களும் அமைதியாக· சனநாயக மென்வடிவங்களுக்கு ஊடாக எதிர்ப்புக்களை காட்ட முயன்ற பல்கலைகழக சமூகம் மீது நடாத்தப்பட்ட இராணுவத்தினரின் வன்முறைகளும் குடா நாட்டில் இராணுவ அச்சுறுத்தல்களை பாவித்து எமது உணர் வுகளை மளுங்கடிக்கும் ஒரு உபாயமாக நாம் கருதுகிறோம். இவ்வாறான இராணுவ நெருக்குவாரங்கள் அமைதிவழி மீது நம்பிக்கை கொண்டுள்ள குடாநாட்டு மக்களை மட்டுமன்றி அதேநிலைப்பாட்டுடன் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியான பளைப்பிரதேச பெண்களினது உணர்வுகளையும் தட்டிக்கேட்கத் தூண்டியுள்ளது.

திறந்தவெளிச்சிறைச்சாலையாக யாழ்ப்பாணம் இருந்துவரும் நிலை இப்பொழுது அரச அராஜகம் மூலம் வெளிப்பட்டு நிரூ பிக்கப்பட்டுள்ளது. எனினும் அமைதிவழியில் மட்டுமே தீர்க்க முடியுமென எண்ணும் எமது பிரச்சினையை இராணுவ வன் முறை மூலம் குழப்ப முயலின் நாமும் அப்பாவித்தனமாக அடங்கிப்போவோம் என எண்ணுவது மூடத்தனமானது. கௌரவ மான நீதியான தீர்வு ஒன்றின் மீது மட்டுமே தமிழ்மக்கள் திருப்தியடைவர் என்பதனையும் அவ்வாறன்றி அச்சுறுத்தல் இராணுவ மேலாதிக்கம் என்பவற்றுக்கு அவர்கள் ஒருபோதும் தலைகுனியப்போவதில்லை என்பதனை அனைத்துலகிற்கும் சிறிலங்கா அரசிற்கும் தெரியப்படுத்தும் ஒரு எழுச்சி வடிவமாக இப்போராட்டத்தையும் இம் மகஜரினையும் தங்களுக்கு கையளிக்கிறோம்.

"சீண்டிவிடுவதுதான் அரசின் நோக்கம் என்றால் தவிர்க்க முடியாது தமிழ்ப்பெண்களுக்கு இனிமேலும் பெண்களை இப் படியான வன்முறைகளுக்குள் தள்ளினால் நாம் பொறுத்திருக்க மாட்டோம்.".

(சோ)

# சிறிலங்கா இராணுவத்தினரின் பெண்கள் மீதான வன்முறைகள் உடன் நிறுத்த வேண்டும்

**-வடகிழக்கு அபிவிருத்திக்கான பெண்கள் குழு வலியுறுத்து**

வடக்குக் கிழக்கு பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறு வனத்தின் கிராமப் பெண்கள் அபி விருத்திக் குழுக்கள் அணிதிரண்டு கடந்த சனிக்கிழமை புங்குடுதீவில் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டு பாழடைந்த கிணற்றில் கல்லோடு கட்டி வீசப்பட்ட தர்சினி மீதான வன்முறையைக் கண் டித்து கடந்த புதன் கிழமையன்று இலங்கை போர்நிறுத்தக் கண் காணிப்புக் குழுவிற்கு பெண்கள் அபி விருத்திக் குழுக்களால் மகஜர் கையளிக்கப்பட்டது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள் ளதாவது;புங்குடுதீவில் கடற்படை யினரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு கொல்லப்பட்டு கிணற்றில் போடப்பட்ட தர்சினியின் கொடூரச் சம்பவம் மக்களை அதிர வைத்திருக்கின்றது.

தர்சினியின் படுகொலை யாழ்ப் பாணக் குடாநாடு முழுவதும் பரவி மக்களுக்கும் இராணுவத்திற்கு மிடையே ஓர் பதற்றமான நிலையை உருவாக்கியுள்ளது.

கடற்படையினர் கூறுவது போல் போதுமான ஆதாரம் இல்லாத போதும் இராணுவத்தினரால் தமிழ்ப் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படுகின்ற சரித்திரம் தமிழ்ப்பெண்களின் மனதில் இன்னும் ஆறவில்லை.

சட்ட முறையில் தமிழ்பெண்களுக்கு நம்பிக்கை இல்லாததன் காரணம் பல தடவைகளில் சட்டம் அவர் களைக் கைவிட்டுவிட்டது.· 1996 இல் சிறிலங்கா இராணுவத்தினரால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட கிருசாந்தியின் வழக்கு நீதி மன்றத்திற்கு எடுத்துச் செல்லப் படவில்லை.பாதுகாப்பு என்ற போர்வையில் இலங்கை இராணுவத் தினரால் ஆக்கிரமிப்பு செய்திருக்கும் பிரதேசங்களில் தொடர்ந்தும் இப்படியான சம்பவங்கள் இனியும் நடைபெறமாட்டாதென்பது கேள்விக் குறியாகவேயுள்ளது. பெண்கள் மீதான வன்முறைகளை உடன் நிறுத்த வேண்டும். எனவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

# முல்லை. நகரப்பகுதி உணவகங்களில் சோதனை

(முல்லை)

முல்லைத்தீவு நகரப்பகுதிகளிலுள்ள உணவகங்களில் முல்லை.மாவட்ட வைத்திய அதிகாரி தலைமையிலான குழுவினர் திடீர் சோதனையினை மேற்கொண்டனர்.

இதன்போது உணவகங்களில் பணிபுரிவோர் பரிசோதிக்கப்பட்டு அவர்களுக்கு நெருப்புக்காய்ச்சல் தடுப்பு மருந்து ஏற்றப்பட்டுள்ளதுடன், அவர்களுக்கான அடையாள அட்டைகளும் வழங்கப்பட்டன.இவ் அடையாள அட்டைகளை வைத்திருக்காத எவரும் உணவகங்களில் வேலை செய்ய முடியாதெனவும், பொதுச் சுகாதார பரிசோதகர்களும், முல்லை,மாவட்ட சுகாதார வைத்தியஅதிகாரியும் தெரிவித்துள்ளனர். (20)

# அமெரிக்க வெளியுறவு அமைச்சர் சனவரி கொழும்பு வருகை

(கொழும்பு)

அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொண்டலீசாரைஸ் சனவரி மாதமுற்பகுதியில் சிறிலங் காவுக்குப் பயணம் செய்யவுள்ளதாக சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் மங்களசமரவீர தெரிவித்துள்ளார். சிறிலங்காப் பாராளுமன்றில் நேற்று முன்தினம் மங்கள சமரவீர கூறிய தாவது;

அமெரிக்க அமைச்சரின் பயணத் தின் மூலம் சிறிலங்காவுக்கும், அமெரிக்காவுக்குமிடையிலான உறவு கள் மேலும் வலுவடையும்.

இந்தியாவுக்குப் பயணம் செய்து பிரதமர் மன்மோகன்சிங்கையும், அமைச்சர்களையும், அதிகாரி களையும் சந்தித்ததன் மூலம் சிறி லங்காவுக்குப்பல நன்மைகள் கிடைத்துள்ளன.

சிறிலங்காவின் இறைமையை பாதிக்காத வகையில் இனப்பிரச் சினைக்குத்தீர்வு ஏற்படவேண்டும் என்று இந்தியா விரும்புகின்றது.

இந்தியாவுடன் உறவுகளைப் பேணும் அதேவேளை ஐரோப்பிய ஒன்றியத்துடனும், யப்பானுடனும் எமது உறவுகளை மேலும் வலுப் படுத்திக்கொள்ள வேண்டும்.

இதற்கு வெளிவிவகார அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

ஐ.நா.செயலாளர்நாயகம் பதவிக்கு ஜயந்ததனபால போட்டி யிடுகின்றமையினால் அவருக்கு ஆதரவாக பிரச்சாரங்களை எமது அமைச்சு மேற்கொண்டு வருகிறது என்றார் மங்கள சமரவீர.

இதனிடையே இத்தாலி நாட்டின் முன்னாள் பிரதமர் அன்டோனியோ அமந்தோ தலைமையிலான குழு அடுத்த வாரம் சிறிலங்கா வருகிறது.

இத்தாலி நிதியுதவித்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுவரும் ஆழிப்பேரலை மீளமைப்புத் திட்டங்களை இக்குழு பார்வையிடும். இத்தாலி நாட்டின் பிரதி வெளி விவகார அமைச்சர் கடந்தவாரம் சிறி லங்கா வருகைதந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இராணுவப்பேச்சாளராக பிரசாந்த் சமரசிங்க நியமனம்

புதிய சிறிலங்கா இராணுவப் பேச்சாளராக பிரிகேடியர் பிரசாந்த் சமரசிங்க கடந்த வெள்ளிக்கிழமை முதல் நியமிக்கப்பட்டுள்ளார். சிறி லங்கா இராணுவத்தினரின் பத்தாவது இராணுவப் பேச்சாளராகப் பதவி நியமனம் பெற்றுள்ள இவர் இராணுவ ஊடகப் பிரிவில் மாற் றங்கள் பலவற்றைக் கொண்டு வரவுள்ளதாக இராணுவத் தலை மையக அதிகாரிகள் தெரிவித் துள்ளனர்.இராணுவசமிக்ஞைப் படைப்பிரிவின் 222ஆவது பிரிகேட்டின் தலைமை அதிகாரியா கத் திருமலையில் இவர் இறுதியா கக் கடமையாற்றியிருந்தார்.

# உணவு, சுற்றாடல் பாதுகாப்பு உரிமம்பெற தமிழீழ சுகாதார சேவையினர் அறிவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

தாயகப் பிரதேசத்திலுள்ள அனைத்து உணவு கையாளும் நிலையங்களும், கீழ்குறிப்பிட்ட சில செயற்பாட்டு நிலையங்களும் தமிழீழ சுகாதார சேவைகளின் 2006 ஆம் ஆண்டு உணவு, சுற்றாடற் பாது காப்பு உரிமத்திற்கு சனவரி 01 ஆம் திகதியிலிருந்து சனவரி 31 ஆம் திகதியினுள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் (கறுக் காய்க்குளம்), வவுனியா (புளி யங்குளம்) ஆகிய இடங்களில் அமைந்துள்ள மாவட்ட சுகாதார சேவை பணிமனையில் விண்ணப் பிக்குமாறு கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது.

விண்ணப்பிக்கும் உணவு கையாளும் நிலையங்களாக உணவ கங்கள், வெதுப்பகங்கள், குளிர்பான உற்பத்தி விற்பனை நிலையங்கள், தங்ககங்கள், எண்ணெய் உற்பத்தி நிலையங்கள், பல்பொருள் வாணி பங்கள், ப.நோ.கூ சங்க சில்லறை விற்பனை நிலையங்கள், களஞ்சி யங்கள், அரைக்கும் அரிசி, நெல் குற்றும் ஆலைகள், தண்ணீர் உணவு அடைக்கும் நிலையங்கள், நடமாடும் உணவு விற்பனைகள், சிற்றுண்டி பலகார வகைகள் தயாரித்து உணவு கையாளும் நிலையங்களுக்கு வழங்குபவர்கள், பழ வாணிபங்கள், நடமாடும் உணவு விற்பனைகள், ஐஸ்கட்டி உற்பத்தி விற்பனை, மீன் பதனிடல், இறைச்சி மாமிச வாணி பங்கள், பல்பொருள் பெட்டிக் கடைகள் உட்பட அனைத்து உணவு கையாளும் நிலையங்களும் மற்றும் சுத்திகரிப்பு நிலையங்கள், வாகன திருத்தகங்கள், சிகையலங்கார நிலையங்கள், சல்வைத்தொழி லகங்கள், மின்னொட்டுத்தொழி லகங்கள், பொலித்தீன் உற்பத்தி நிலையங்கள், ஐம்பதிற்கும் மேற்பட்ட கோழிகளைக்கொண்ட கோழிப் பண்ணைகள், ஐம்பதிற்கும் மேற்பட்ட விலங்குகளைக் கொண்ட விலங்குப் பண்ணைகள், மர அரிவு நிலை யங்கள், விலங்கறுமனைகள், அச்சகங்கள், வாகன ரயர் ஒட்டுத் தொழிலகங்கள் ஆகிய நிலை யங்களும் உணவு, சுற்றாடற் பாது காப்பு உரிமத்திற்கு விண்ணப் பிக்குமாறு தமிழீழ சுகாதார சேவைகள் பொறுப்பாளர் கேட்டுக் கொள்கின்றார்.

(கு, தீ)

# நிவாரணம், புனர்வாழ்வு, நல்லிணக்க அமைச்சு
## வடக்கு கிழக்கு மாகாண சபை.
## வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தித் திட்டம் - II (நீகோட் - II)
## நிதி ஆசிய அபிவிருத்தி வங்கி
## "ஆஅவ" கடன் இல. 2168 - சிறி (எஸ்எவ்)

# கேள்வி அறிவித்தல் -இல 65

## குடிசார் வேலைகளைப் பெறுதல்

01. வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்திட்டம் (NECORD-II) ஆகுசெலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆ.அ.வ") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. இதன் பின்னால் தொழில்தருனராகக் குறிப்பிடப்படும் (NECORD) திட்டக் கேள்விச் சபையின் தலைவரால் பின்வரும் வேலைகளுக்கு தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

**அட்டவணை**

| இல | ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக்குறைந்த இக்டாட் பதிவு | கேள்விப் பிணைப்பணம் (ருபா) |
|---|---|---|---|---|
| 01 | MN/NECORD-II/RD/02 | பிரைமிங் மற்றும் டிபிஎஸ்ரி - பிரமனாலன்குளம் பரப்புகடந்தான் வீதி (9.6 - 14.0 கி.மீ) | M4 பெருந்தெருக்களும் பாலங்களும் | 215,640/= |
| 02 | MN/NECORD-II/RD/04 | பிரைமிங் மற்றும் டிபிஎஸ்ரி - மாந்தை பரப்புகடந்தான் வீதி (3.5. - 8.0 கி.மீ) | M4 பெருந்தெருக்களும் பாலங்களும் | 238,760/= |
| 03 | KN/NECORD-II/IR/01 | பிரைமிங் மற்றும் டிபிஎஸ்ரி - முறிகண்டி அக்கராயன் - வன்னேரிக்குளம் (0.0 -6.0 கி.மீ) | M4 பெருந்தெருக்களும் பாலங்களும் | 349,120/= |
| 04 | KN/NECORD-II/IR/01 | குடமுருட்டிக்குளம் நீர்ப்பாசனத் திட்டம் புனரமைப்பு | M3 நீர்ப்பாசனம் | 630,960/= |

03. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களும் கேள்வி கோருவதற்கு தகுதி உடையவர்கள்.

I. நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் பதிவு, தரப்படுத்தல்திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரராகப் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II. இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச) உறுப்பினராக விளங்க வேண்டும்.

III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக்குறைந்தது ஒத்த தன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடித்ததுடன், மேற்கொள்ளப்பட்ட வேலைகளில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்தோ அல்லது உசாவலர்களிடமிருந்தோ பெறப்பட்ட திருப்திகரமான சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்படவேண்டும். இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழுநிரலொன்று வழங்குமாறு கேள்வி கோருவோர் வேண்டப்படுகின்றனர்.

IV. "இக்டாட்" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

V. ஒப்பந்தகாரர் மோசடியான, அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு, அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் அடங்கலாகாது.

VI. கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்க வேண்டும்.

4. ஏதாவது ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் NECORD வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.

5. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் கேள்வி தொடர்பான மேலதிக தகவல்களை திட்டப்பணிப்பாளர் நீகோட் திட்டம் 55, கந்தசுவாமி கோவில் வீதி, திருகோணமலையில் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி 026-2227434 ஃபக்ஸ் 026-2227401 இணையதள முகவரி www.necord.org ஈமெயில்: necordva@sltnet.lk.

6. கேள்வி ஆவணங்களை 26.12.2005 இல் இலிருந்து 09.01.2006 வரை காலை 9.30 இல் இலிருந்து மாலை 3.00 மணி வரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து, மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா 2,000/= ஐச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

7. இரு பொறிவைக்கப்பட்ட உறைகளில் தனியாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்வியையும், கேள்வி கோருவோரின் முன்தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன், இதன் தொடர்பாக பந்தி 8இல் குறிப்பிட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஏற்ப ஒப்படைக்கப்படவேண்டும்.

8. பொறிவைத்த கேள்விகள் யாவும் தலைவர், திட்ட கேள்விச்சபை, NECORD, 55,கந்தசுவாமி கோவில் வீதி, திருகோணமலை என்ற விலாசமிடப்பட்டு, 18,01. 2006 காலை 11.30 மணிக்கு முன்பதாக கிடைக்க வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். அப்பொழுது கேள்விதாரர்கள், அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.

9. முன்கூட்டிய கேள்விகோரல் பற்றிய கூட்டமொன்று, எமது அலுவலகத்தில் 09.01.2006 ஆந் திகதி அன்று காலை 11.30 மணிக்கு நடைபெறும்.

10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருனர் பொறுப்பாக மாட்டார்.

த.லங்காநேசன்,
தலைவர், கேள்விச்சபை,
வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தித்திட்டம்,
55, கந்தசுவாமிகோவில் வீதி, திருகோணமலை.

(சி-13599)

# ஓராண்டு நினைவலையில்...

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 1942 - 05 - 06 |  | 2004 - 12 - 26 |

| | | தோற்றம் |
|---|---|---|
| |  | 1986 - 12 - 04 |

**அமரர்:- இராசையா மகேஸ்வரி**
**வத்திராயன் - வடக்கு**

**இரவீந்திரராசா - ஜெசி**
**உடுத்துறை - வடக்கு**

ஆயிரம் உறவுகள் இருந்திட்டாலும்
அம்மா உங்களுக்கு நிகராகுமா
எம் இதய நினைவெல்லாம்
கனவாகிப் போனதம்மா
காலனவன் கடிகாரம் பார்த்திருந்து
கண்ணிமைக்கும் நேரமதில்
கவர்ந்து விட்டான்
இனி எங்கு எம்
அம்மாவைக் காண்போம்.
பல நூறு கதை சொல்லி பக்குவமாய்
எமை வளர்த்த அம்மாவே
உங்கள் கதை இடையில் முடியும் என்று
சிறு நினைப்பும் தோன்றலையே...
அனலுகின்ற எம்மனதை

என்ன சொல்லி நாமணைக்க
வட்ட நிலா சோறூட்டி
தாலாட்டி வளர்த்திட்ட
தலைமகன் பிள்ளையும்
உங்களுடன் வந்ததுவே
கெட்ட விதிக்கையினாலே
உங்கள் தெய்வ உயிர் போனதம்மா
கொன்றவனைத் தெரிந்திருந்தும்
கொல்ல முடியா பாவியம்மா - நாம்
ஆயிரம் ஆயிரம் நினைவுகளால்
ஆறாது எம்மனம் என்றும்
ஆனாலும் ஆறட்டும் உங்கள் மனம்.
இறையடியில் ஓம் சாந்தி... சாந்தி.... சாந்தி.....

நாளை (26-12.2005) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்தி நினைவு நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

முகவரி:- மூலிகைத்தோட்டம்
இல.91, முதலாம் பகுதி,
திருவையாறு, கிளிநொச்சி

தகவல்:-
குடும்பத்தினர்

(7166)

# 01ஆம் ஆண்டு நினைவலைகள்

26.12.2004 கடற்கோள் அனர்த்தத்தின் போது உயிர் நீத்த உறவுகள் நினைவாக

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 30 - 05 - 1975 |  | 26 - 12 - 2004 |
| மலர்வு 01 - 05 - 1999 | | |

**செல்வகுமார் ஜீவராணி**
**செல்வகுமார் திலக்**

ஆழிப்பேரலை ஆவேசம் கொண்டு
கரை தளுவியதால்
கை நளுவிப் போன - எம்
பாச உறவுகள் நினைவுடன்...

26.12.2005 எமது இல்லத்தில் நடைபெறும் 01ஆம் ஆண்டு ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:-
த.செல்வகுமார்
குடும்பத்தினர்
மருதங்கேணி -வடக்கு

(7163)

# சினிமாப்பாடல் தடை

எமது பண்பாட்டுக்கொவ்வாதனவும் இளந்தலைமுறையினரைத் தவறான வழிக்கு இட்டுச்செல்லக் கூடியனவுமான திரைப்படப் பாடல்களைப் பயணியர் பேருந்துகளில் ஒலிபரப்புவதைத் தடுக்குமாறு எமது மக்களும், சமூகநலன் விரும்பிகளும் எமக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர். எனவே அவ்வாறான திரைப்படப்பாடல்களைப் பயணியர் பேருந்துகளில் ஒலிபரப்புவது 2006. 01. 01 ஆம் நாளிலிருந்து தடைசெய்யப்படுகிறது. திரைப்படவெளியீட்டுப் பிரிவினால் தெரிவுசெய்யப்பட்ட சிறந்த திரைப்படப் பாடல்களைக் கொண்ட ஒலிப்பதிவு நாடாக்கள் நேரக்கணிப்பாளர் பணிமனைகளில் 31. 12. 2005 ஆம் நாளிலிருந்து விற்பனை செய்யப்படவுள்ளன. அவற்றைப்பெற்று பேருந்துகளில் ஒலிபரப்புமாறு வேண்டுகின்றோம்.

பொறுப்பாளர்,
நடுவப்பணிமனை,
தமிழீழப் போக்குவரவுக்கழகம்.

(சி- 13600)

# பயணியர் போக்குவரவுப் பேருந்தின் நேர ஒழுங்கினைக் கடைப்பிடித்தல்

பேருந்துப் போக்குவரவிற்கு வழங்கப்பட்ட நேர ஒழுங்கில் போக்குவரவுப் பணியை மேற்கொள்ளுமாறு பேருந்து உரிமையாளர், ஓட்டுநர், நடத்துநர் ஆகியோரை வேண்டுகிறோம்.

இந்நேர ஒழுங்கினைக் கருத்திலெடுக்காது செயற்படுவதால், பயணியர் தமது தேவையை நிறைவு செய்ய முடியாதுள்ளதுடன், பேருந்து உரிமையாளரிற் சிலர் கூடிய வருமானமும், சிலர் குறைந்த வருமானமும் பெற வழிவகுக்கிறது. பேருந்து உரிமையாளர் அனைவரும் நேரஒழுங்கைக் கடைப்பிடிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பொறுப்பாளர்,
நடுவப்பணிமனை,
தமிழீழப் போக்குவரவுக் கழகம்.

(சி- 13651)

## யு.நி.அமுலாக்கத்தை...

குழுவொன்று எங்களிடம் வருகை தந்து தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைகள் பற்றி தீவிரமாக கரிசனை செலுத்தி கலந்துரையாடினார்கள்.

தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையினை எப்படி சீர்செய்வது என்பது பற்றியும் மக்களுடைய கொந்தளிப்பான நிலைமையை தணிவுக்குகொண்டு வந்து எப்படியொரு இயல்பு நிலையை கொண்டு வரலாம் என்பது பற்றியும் பேராபத்தைச் சந்தித்துள்ள யுத்த நிறுத்த சூழலை எப்படி சீர்படுத்தலாம் என்பது பற்றியுமே தூதுக்குழுவினரின் கரிசனை இருந்தது. தகுந்த தெளிவான விளக்கத்தை தூதுக் குழுவினருக்கு நாங்கள் கொடுத்துள்ளோம்.

அண்மைக் காலமாக எமது மக்கள் மீது இராணுவம் கட்டவிழ்த்துவிட்டுள்ள கடுமையான வன்முறைச் சம்பவங்களை உடனடியாக முடிவுக்கு கொண்டு வரவேண்டும். முக்கியமாக தொடர்ந்து மக்கள் கொல்லப்படுவதும், தாக்கப்படுவதும் இடம்பெற்று வருகிறது. முக்கியமாக தொடர்ந்து அண்மைக்காலத்தில் இதன்தீவிரத் தன்மையாகபுங்குடுதீவில் பெண்பிள்ளை யொருவரை கடத்திக் கொண்டு சென்று சிறிலங்கா கடற்படையினர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி மிக கொடூரமாக கொலை செய்து அக்கொலையினை மறைக்கமுற்பட் டமை தமிழ்மக்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பினை உருவாக்கியுள்ளது என்பதை இச்சந்திப்பில் சுட்டிக்காட்டியுள்ளோம்.

ஏனெனில் பெண்கள் தொடர்பாவும், சிறுவர்கள் தொடர்பாகவும் கரிசனை செலுத்துகின்ற இன்றைய சூழலில் குறிப்பாக சமாதான சூழல் என்று சொல்லப்படுகின்ற இன்றைய நிலையிலேயே கடந்த காலத்தை நினைவூட்டுவது போல கிருசாந்தி, சாரதாம்பாள் போன்று பல இளம் பெண்களை கடத்தி கொடூரங்களுக்கு உட்படுத்துவது என்பது சிறிலங்கா படைகளின் வழமையாக இருந்து வருகின்றது.

தற்போதைய சூழலிலும் மிகவும் மனித இனமே வெட்கித் தலைகுனிய வேண்டிய மிகமோசமான கொடூரமான வன்முறையை எமது சகோதரி ஒருவருக்கு கட்டவிழ்த்துவிட்டது என்பது தமிழ்மக்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது என்பதை சுட்டிக்காட்டியுள்ளோம்.

இதன் விளைவாகத்தான் மக்கள் போராட்டங்களும், எதிர்ப்புக்களும் இடம் பெறுகின்றன. மக்கள் போராட்டங்களை இராணுவத்தைக் கொண்டு அடக்கியமை பெரியளவில் வன்முறைகள் தீவிரமடைய காரணமாக இருந்தது.

முக்கியமாக பல்கலைக்கழக மாணவர்கள், உபவேந்தர், பேராசிரியர்கள், தாக்கப்பட்டதும், சுட்டுக்காயப்படுத்தப்பட்டதும் மக்கள் கொல்லப்படுவதும் படைக்கும் மக்களுக்கு மிடையே முறுகல் நிலையையே தீவிரமாக்கியுள்ளது.

இந்நிலைமைகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதானால் உடனடியாக யுத்த நிறுத்த அமுலாக்கத்தை உறுதி செய்ய வேண்டும்.

யுத்த நிறுத்த அமுலாக்கம் என்பது எல்லா விதத்திலும் மக்களுக்கு நல்லதைச் செய்கின்ற இயல்புநிலையைக்கொண்டு வருகின்ற, இருதரப்பும் ஏற்றுக்கொண்ட சரத்துக்களைக் கொண்டது.

யுத்த நிறுத்த உடன்பாட்டை நடைமுறைப் படுத்துவதற்கு உடனடியாக ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கவேண்டும். இதற்கு சர்வதேச சமூகம் உதவ வேண்டும்.

இலங்கை அரசாங்கம் முன்நிபந்தனைகளை விதி [illegible]ந்தநிறுத்த அமுலாக்க பேச்சுவார்த்தைக[illegible] இழுத்தடிப்பதை தவிர்க்க வேண்டும்.

உண்மையிலேயே இணைத் தலைமை நாடுகளின் தூதுவர்களுக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம். தற்போது ஏற்பட்டுள்ள பதற்றமான சூழல்ல கருத்தில் எடுத்து நிலைமைகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர இணைத்தலைமை நாடுகள் உடனடியாக வருகைதந்து எம்மைச் சந்தித்து கருத்துக்களை அறியமுற்பட்டது. அடுத்த கட்ட நகர்வுகளைச் செய்வதற்கு ஊக்கம் தரும் வகையில் ஆலோசனைகளை வழங்கியமையை நாங்கள் வரவேற்கின்றோம்.

இவ்விடயங்களில் அரச தரப்பு எவ்வளவு தூரம் ஒரு இணக்கப்பாட்டுக்கு வரும் என்பது தான் இன்றைய நிலையில் கேள்வியாகவுள்ளது.

**கேள்வி :- அரச தரப்புடன் தூதுக்குழு சந்திப்பை முடித்து வருகை தந்ததால் அரச தரப்பிடம் இருந்து ஏதாவது யோசனைகள் கொண்டு வந்தார்களா?**

பதில் :- தற்போதைய நெருக்கடி நிலைமையை எப்படி தணிவுக்கு கொண்டு வரலாம் என்பது பற்றிய ஆலோசனையை இருதரப்புக்கும் வழங்கியுள்ளார்கள். இவ் ஆலோசனைகளில் யுத்த அமுலாக்கம் பற்றி இருதரப்பும் பேச வேண்டும் என்பது முக்கிய ஆலோசனையாக இருந்தது. இதைத்தான் எம்மிடமும் தெரிவித்திருந்தார்கள்

**கேள்வி:- யப்பானில் பேச்சுவார்த்தை இடம்பெறவேண்டும் என்ற நிபந்தனை யிருக்கும் போது தூதுக்குழுவினரின் பயணம் பற்றி?**

பதில் :- யப்பான் தூதுவர் கூட வருகை தந்திருந்தார். எமது நிலைப்பாட்டை யப்பான் தூதுவருக்கும் எடுத்து விளக்கினோம். யப்பானில் பேச்சுவார்த்தை நடத்துவது என்பதில் எமக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை. இருந்தாலும் நோர்வே அனுசரணைப் பணியை வழங்குவதாலும் அமைதி முயற்சிகளில் நோர்வே முக்கிய பங்கை வகிப்பதாலும் நோர்வே நாட்டிலேதான் முதற்கட்டப் பேச்சுவார்த்தையை நடத்துவது பொருத்தமாக இருக்கும்.

நோர்வேயின் அனுசரணையை எல்லோரும் ஏற்றுக்கொண்ட நிலையில் நோர்வே ஒரு நடுநிலையான பொருத்தமான இடம். முதல் கட்டப்பேச்சுக்களை நோர்வேயில் நடத்துவதை எமது மக்களும், எமது தலைமைப்பீடமும் விரும்புகின்றது. நோர்வேயில் முதல் கட்டமாக யுத்த நிறுத்த அமுலாக்கப் பேச்சுவார்த்தைகளை நடத்தலாம் என்பதில் எமது தலைமைப் பீடம் உறுதியாக உள்ளது என்பது பற்றியும் அதற்கான காரணங்களையும் விளக்கினோம்.

அண்மைக்காலத்தில் மகிந்த ராஜபக்ஷவோ, ஆட்சிக் கூட்டில் உள்ளவர்களோ நோர்வே பற்றியும் ஜரோப்பிய ஒன்றியம் பற்றியும் கடுமையான விமர்சனங்களை செய்து நடுநிலைப் போக்குகளை பலவீனப்படுத்துகின்ற செயற்பாடுகளில் இறங்கிக்கொண்டு ஆசிய நாட்டில்தான் பேச்சுவார்த்தை, நோர்வேக்கு அனுசரணைப்பணி என்ற நிலைப்பாட்டை எடுப்பது அரசினுடைய முரண்பட்ட போக்கையும் தமிழ் மக்களுக்கு விதிக்கின்ற சதி முயற்சியாகத்தான் பார்க்க வேண்டியுள்ளது.

இந்த இக்கட்டிலேயே இணைத்தலைமை நாடுகள் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும். நோர்வேயை எல்லோரும் ஏற்றுக்கொண்டு இருக்கின்றீர்கள். இணைத்தலைமை நாடுகள், உலக நாடுகள், இலங்கை அரசாங்கம், தமிழீழ விடுதலைப் புலிகள் எல்லோரும் ஏற்றுக்கொண்ட சூழலில் அனுசரணையாளர்கள் என்ற வகையில் நோர்வேயில் பேச்சுக்களை நடத்தலாம் என்பது மிகப் பொருத்தமாக இருக்கும். முக்கியமாக பேச்சுக்கள் யுத்த நிறுத்த உடன்படிக்கை தொடர்பாக இருக்க வேண்டும். யுத்த நிறுத்ததை அமுலாக்கம் செய்வதன் ஊடாக எமது மக்களை ஓரளவுக்கு அமைதிப்படுத்தமுயலலாம்.

மக்கள் மீது இராணுவ நெருக்குவாரங்களை கட்டவிழ்த்துவிட்டு விட்டு மக்களை அமைதிப்படுத்த முயன்றால் அது ஒருபோதும் வெற்றியளிக்காது.

இந்நிலைமைகளை சுட்டிக்காட்டி நோர்வேயில்தான் பேச்சுக்கள் நடத்தப்பட வேண்டும் என்பதை இன்றைய சந்திப்பில் ஆணித்தரமாக வலியுறுத்தியுள்ளோம். இதனை இலங்கை அரசாங்கத்துக்கும் மற்றும் அனைத்து தரப்புக்கும் எடுத்துச் செல்வார்கள் என நம்புகின்றோம்.

**கேள்வி :- உலக வங்கி இலங்கைக்கு வழங்குகின்ற நிதியில் 51 வீதம் நிதியை நிறுத்தியுள்ளது. இந்நேரத்தில் தங்களுக்கு ஏதாவது அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டதா?**

பதில்:- அழுத்தம் என்பதைவிட தங்களுடைய ஆலோசனைகளைத் தான் வழங்கி இருக்கின்றார்கள். தற்போதைய நிலைமைகளின் தீவிரத் தன்மையை உணர்ந்தவர்களாக காணப்பட்டார்கள். அதாவது தற்பொழுது தமிழர் தாயகப் பகுதிகளில் மக்கள் மீது தீவிரப்படுத்தப்பட்டுள்ள வன்முறையில். அதன் எதிர்விளைவாக படைத் தரப்பிலே ஏற்பட்டுள்ள அழிவுகள் பற்றியுமே தூதுக்குழுவினரின் [illegible]டனடி கரிசனையாக இருந்தது. இந்த நிலையில் மாற்றத்தைக் கொண்டு வரவேண்டுமென்றும் அவர்களின் முக்கியகரிசனையாக இருந்தது.

ஆகவே பேச்சுக்கு செல்ல வேண்டும் என்பதையே வலியுறுத்தினார்கள். ஏற்கனவே எமது தலைப்பீடத்தின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியுள்ளோம்.

உடனடியாகவே பேச்சுவார்த்தைகளை தொடங்க வேண்டும். யுத்த நிறுத்த உடன்படிக்கை அமுலாக்கம் கொண்டுவரப்பட வேண்டும் என்பதில் எமது தலைப்பீடத்திற்கு இருவேறு கருத்து இல்லை. எமது தலைமைப்பீடம் உறுதியான நிலைப்பாட்டோடு உள்ளது. ஆனால் பேச்சுவார்த்தை நடத்தும் இடம் தொடர்பாக நிபந்தனைகளை விதிப்பது ஏற்றுக் கொள்ளமுடியாது. சர்வதேச சமூகத்திடம் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகளையோ, தமிழ்மக்களையோ தொடர்புகளை அறுப்பதோ பலவீனப்படுத்துவதோ இவ்வாறான போக்கை அனுமதிக்க முடியாது. சர்வதேச சமூகத்தின் நடுநிலையும் சமதரப்பு என்ற ஏற்றுக்கொள்ளலும் ஆதரவும்தான் சமாதானத்தின் ஒரு பக்கபலமாகவுள்ளது.

**கேள்வி:- இன்றை சமாதானப் பேச்சுக்கள் தொடர்பில் இலங்கையரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இரண்டாவது கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளதே?**

பதில் :- இதுவரை அவ்வாறான கடிதம் ஒன்றும் வரவில்லை. இன்று வருகை தந்த இணைத்தலைமை நாடுகளின் தூதுக்குழுவின், அரசு யப்பானில் பேச்சுவார்த்தை நடாத்த விரும்புவதாக தெரிவித்து இருந்தார்கள். அதனை நாங்கள் நிராகரித்துள்ளோம். நோர்வேயில் முதல் கட்டப் பேச்சுக்களை தொடங்கி அடுத்த கட்டப் பேச்சுக்களை யோசிக்கலாம். அவசரமாக விரைவாக யுத்த நிறுத்த அமுலாக்கத்தில் எல்லோரும் கரிசனை கொள்ளவேண்டியவர்களாக உள்ளோம். இதுதான் வன்முறைகளை முடிவிற்கு கொண்டுவர உதவும்.

கடந்த நான்கு வருட யுத்த நிறுத்த சூழல் அமைதி முயற்சிகள் எல்லாம் எமது மக்களுக்கு வாழ்வியல் நெருக்கடியைக் கொடுத்துள்ளதே தவிர எதுவித நன்மைகளையும் அளிக்கவில்லை.

இராணுவ நெருக்குவாரங்களும் அடக்குமுறைகளும் அதிகமாகிச் செல்லுகின்றது. பொதுமக்கள் மீதான கொலைகளும் தாக்குதல்களும் குறிப்பாக இளம் பெண்களை கடத்தி படுகொலை செய்கின்றமை. இந்தப்போக்கு மக்களிடையே கொந்தளிப்பு நிலையை ஏற்படுத்தியுள்ளது. இராணுவம் யுத்தநிறுத்த உடன்படிக்கையை ஏற்று அதன்படி நடக்குமாக இருந்தாலே இயல்பு நிலையைக் கொண்டு வருவது சாத்தியப்படும். இதனை நாம் தெளிவாக இன்று விளக்கியுள்ளோம்.

**கேள்வி: இணைத்தலைமை நாடுகளில் இந்தியாவையும் உள்ளடக்க அரசாங்கம் விரும்புகின்றது. இது பற்றி இன்றைய சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டதா?**

பதில்: இணைத்தலைமை நாடுகளில் புதிதாக எவரையும் இணைத்துக் கொள்வது பற்றி எந்த நாடும் உத்தியோகபூர்வமான கருத்தை முன்வைக்கவில்லை. ஊடகங்கள் மூலமாக மட்டுமே அறிகின்றோம்.

**கேள்வி: நேற்று மன்னாரில் இடம் பெற்ற தாக்குதலுக்கு அரசு விடுதலைப் புலிகள் மீது குற்றம் சாட்டியுள்ளதே?**

பதில்: இதை நாம் முற்றாக மறுக்கின்றோம். ஏனெனில், அண்மைக் காலமாக இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் பொதுமக்கள் வயது வேறுபாடின்றி தாக்கப்படுகின்றார்கள், கொல்லப் படுகின்றார்கள்.

வன்முறைகள் மிகப்பரந்தளவில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. இதன் எதிர்விளைவாக படையினருக்கும் மக்களுக்கும் மத்தியில் மோதல்கள் இடம்பெறுவதன் விளைவாக இவை நடந்திருக்கலாமே தவிர இதனை விடுதலைப்புலிகள் செய்யவேண்டிய தேவை இல்லை. யுத்த நிறுத்த உடன்படிக்கையை விடுதலைப்புலிகள் இன்னும் மதித்து நடக்கின்ற போக்கையே கடைப்பிடித்து வருகின்றார்கள்.

விடுதலைப்புலிகள் இவ்வாறான தாக்குதலை செய்யவேண்டுமாக இருந்தால் யுத்தநிறுத்த உடன்படிக்கையில் இருந்து விலகிக் கொண்டு தான் செய்வார்கள். யுத்தநிறுத்த உடன்படிக்கையை மதித்து செம்மையாக நடைமுறைப்படுத்தவே எமது தலைமைப்பீடம் வலியுறுத்திக் கொண்டிருக்கின்றது.

**கேள்வி: இன்றைய சந்திப்புக்கு பின் நேரடிப்பேச்சுக்கள் உடனடியாக ஆரம்பமாவதற்கான வாய்ப்புக்கள் உள்ளனவா?**

பதில்: சர்வதேச சமூகத்தின் கரிசனையும் விருப்பமும் பேச்சுக்கள் உடனடியாக தொடங்க வேண்டும் என்பதுதான். சர்வதேச சமூகத்தினதும் தமிழ் மக்களினதும் விடுதலைப் புலிகளினதும் விருப்பங்கள் ஒன்றாகவே இருக்கின்றன. இதற்கு இணங்கிவர வேண்டியது இலங்கை அரசுதான். அரசாங்கம் எவ்வளவு தூரம் சாதகமாக முடிவெடுக்குமென்று தான் கேள்விக்குறியாகஉள்ளது.

**கேள்வி: ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களது நிவாரணம் தொடர்பாக?**

பதில்: கடந்த நான்கு வருடங்களாக எடுக்கப்பட்ட முயற்சிகள் பற்றி ஒவ்வொன்றாகச் சுட்டிக்காட்டினோம். பேச்சுவார்த்தைகளின் தொடக்கத்தில் இயல்புநிலையைக் கொண்டுவர இலங்கைப் படைகள் எப்படித் தவறியது? எப்படி பேச்சுக்கள் முடக்கப்பட்டன? உபகுழுக்கள் செயலிழக்கச் செய்யப்பட்டன. பேச்சுவார்த்தைகள் முடக்கமடைந்த நிலையில் ஆழிப்பேரலைகள் தாக்கின. இதில் எங்களின் தேசம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது. இந்த நேரம் அரசுடன் இணைந்து மனிதாபிமான பணிகளை மேற்கொள்ள இணக்கம் தெரிவித்திருந்தோம்.

சர்வதேச சமூகத்தின் வேண்டுகோளுக்கு இணங்க அவர்களது அனுசரணையுடன் உருவாக்கப்பட்ட உடன்பாட்டைக்கூட எந்தவிதமான திருத்தங்களுமின்றி உடனடியாக ஏற்றுக் கொண்டு ஒப்பமிட்டோம். இதன்பின் பொதுக்கட்டமைப்பை சீர்குலைத்து எமது மக்களுக்கு பெரும் அவலத்தை ஏற்படுத்தினார்கள். ஒருவருடம் நிறைவடைந்தும் பாதிக்கப்பட்ட மக்கள் எவ்வளவு நெருக்கடிகளை எதிர்நோக்கியிருக்கின்றனர் என்பதை நேரடியாகத் தரிசிப்பவர்கள் உணரலாம்.

**கேள்வி: ஏதாவது உதவி வழங்குவதாக கலந்துரையாடப்பட்டதா?**

பதில்: இன்றைய சந்திப்பில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை தொடர்பாகவே கலந்துரையாடப்பட்டது. உதவிகள் பற்றிய பேச்சுக்கள் அல்ல. ஆயினும் அவற்றைச் சுட்டிக்காட்டிருக்கின்றோம். சர்வதேச சமூகம் தனது கவனத்துக்கு எடுக்கும் என நம்புகின்றோம்.

**கேள்வி: அரசாங்கத்தின் அழுத்தத்தின் காரணமாக வந்தனரா?**

பதில்: அரசாங்கத்தின் அழுத்தம் போல தெரியவில்லை.

இரு தரப்பையும் சந்தித்து இப்போது இறுக்கமடைந்திருக்கும் சூழலை இயல்பு நிலைக்கு கொண்டுவரும் முயற்சியாகவே இலங்கைஅரசாங்கத்தையும் தமிழீழ விடுதலைப்புலிகளையும் சந்தித்துள்ளதாக நாங்கள் உணருகிறோம்.

**கேள்வி: ஆயுதக்குழுக்களை களையவேண்டும் என்பது உடன்படிக்கையில் உள்ளது. இணைத்தலைமை நாடுகள் இது தொடர்பில் அழுத்தம் கொடுக்குமா?**

பதில்: இணைத்தலைமை நாடுகள் பிரசெல்சில் எடுத்த தீர்மானத்தில் வெளிப்படையாக சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றது. வன்முறைகளைத் தூண்டுகின்ற இராணுவத்துடன் சேர்ந்தியங்குகின்ற ஆயுதக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியிருக்கிறார்கள். தமிழர் தாயகத்தில் இருந்து அகற்றப்பட வேண்டும் என்பதை சுட்டிக்காட்டியிருக்கின்றாகள்.

விடுதலைப்புலிகள் பல கட்டங்களில் விட்டுக் கொடுப்புக்களைச் செய்திருப்பதை பாராட்டினார்கள், ஏற்றுக் கொண்டிருக்கின்றார்கள்.

பொதுக் கட்டமைப்பில் கூட தலைமைப்பீடம் எவ்வளவு விட்டுக்கொடுப்புக்களுடன் நடந்தது என்பதை கலந்துரையாடலின் போது சுட்டிக்காட்டினார்கள். (ச.சோ)

## சிந்தனைக்கு



விடுதலை உணர்வே மனித ஆன்மாவின் சாரமாக-உயிர்மூச்சாக-இயங்குகின்றது. மனித வரலாற்றை இயக்கும் மகத்தான சக்தியும் அதுவே.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 25.12.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## ஏன் எவரும் பேசுவதில்லை?

தமிழ் மக்கள் மீது சிறிலங்கா இராணுவம் பெரும் அராஜகத்தைக் கட்டவிழ்த்துவிட்டுள்ளது. கடந்த சில வாரங்களிற்குள் துப்பாக்கிச்சூடு, கண்ணீர்ப்புகைக்குண்டு, வயர், கேபிள், சைக்கிள் செயின், தடி, பொல்லு போன்ற பலவற்றாலும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இவற்றோடு பாலியல் வல்லுறவும் படுகொலைகளும் இடம்பெற்றுள்ளன. நாம் அறிந்தவரையில் எறிகணைத் தாக்குதலும், விமானக் குண்டு வீச்சு மட்டுமே நடத்தப்படவில்லை.

இத்தாக்குதல்களின் விளைவாக மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். பலர் படுகாயமடைந்துள்ளனர். பல்கலைக்கழகங்களும் மூடப்பட்டுள்ளன. போக்குவரத்துச் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன. மக்கள் வீதிகளில் நடமாடத் தயங்குகின்றனர். பலர் வீடுகளைவிட்டு இடம்பெயர்ந்துள்ளனர்.

ஆனால் இவற்றில் எவற்றையும் உள்நாட்டிலோ, வெளிநாட்டிலோ எவரும் கண்டுகொண்டதாகத் தெரியவில்லை. அவ்வாறு கண்டுகொள்ளப்பட்டிருந்தால் இப்படுகொலைகள், ஒடுக்குமுறைகள் என்பனவற்றிற்கு எதிராகக் குரல் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். மனித உரிமைகள், சனநாயக உரிமைகள் பற்றி உணர்வுபூர்வமாகப் பேசும் அன்றி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் எவருமே கண்டித்திருக்க வேண்டும்.

தம்மை நடுநிலையாளர்களாகவும், நீதி வழுவாதவர்கள் போன்றும் காட்டிக்கொள்ளவிளையும் சிலர் சிறிலங்கா இராணுவத்தினரின் தாக்குதல்களைப் பதில் தாக்குதல் எனக் காரணம் கற்பிக்க முற்படுவதோடு அதிலும் சிலர் சிறிலங்கா இராணுவம் பொறுமை காத்து வருவது போன்றும் பேசத் தலைப்பட்டுள்ளனர்.

ஆனால் நடுநிலையாகவும், யதார்த்தத்தை விளங்கிக் கொள்ளும் எவருமே இவ்வாறு பேசவோ கூறவோ முடியாது. ஏனெனில் சிறிலங்கா இராணுவமே ஒவ்வொன்றையும் , ஆரம்பித்து வைக்கின்றது என்பதே உண்மையாகும். எடுத்துக் காட்டாக அண்மையில் நீர்வேலியில் இரு அப்பாவி இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்பட்டதன் விளைவாகவே கோண்டாவிலிலும்,கட்டப்பிராயிலும் , கண்ணி வெடித்தாக்குதலும், பல கிரனைட் வீச்சுக்களும் இடம்பெற்றன. அதேவேளை புங்குடுதீவில் இளம் பெண் ஒருவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டதை அடுத்தே பேசாலையில் கடற்படையின் மீதான கண்ணி வெடித் தாக்குதல் இடம்பெற்றது.

இதேவேளை இத்தகைய உடன் காரணிகளுக்கு அப்பால் அடிப்படையான காரணி ஒன்றையும் சிறிலங்கா ஆட்சியாளர்கள் மட்டுமல்ல, சர்வதேச நாடுகளும் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது சிறிலங்கா இராணுவம் தமிழர் தாயகத்தில் நிலை கொண்டுள்ளது. ஆக்கிரமித்துக்கொண்டுள்ளது என்பதே அதுவாகும்.

இந்நிலையில் ஆக்கிரமிப்பாளர்கள் தமது இருப்பை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் வெளியேற்றத்தை தாமதப்படுத்த வேண்டும் என விரும்பின் அதற்கு உதவக் கூடியது மக்களின் அபிலாசைகளுக்கு ஏற்ற விதத்தில் நடந்து கொள்வதே ஒழிய, மக்கள் மீது அதிகாரத்தைச் செலுத்துவதனால் அது சாத்தியமாக மாட்டாது. உலகில் மிகப் பெரும் வல்லரசுகளே மக்களை அடக்கி ஆளமுற்பட்டு தோல்வியே கண்டுள்ளன. இதற்கு பல உதாரணங்களுமுண்டு.

ஆனால் இவற்றை விட்டு விட்டு விடுதலைப்புலிகளே தாக்குதலை நடத்துவதாகவும், அது யுத்த நிறுத்த மீறலாகும் எனக் கூறுவது எத்தனை பொருத்தப்பபானது? அத்தனைக்கும் சில புதிய அமைப்புக்கள் இத்தாக்குதல்களுக்கு உரிமை கோரியுள்ளதோடு எதிர்காலத்திலும், தாக்குதல்கள் நடத்தப்படும் எனவும் எச்சரித்தும் வருகின்றன.

சரி இதுதான் ஒருபுறம் இருக்கையில் புலிகள் தான் தாக்குதல்களுக்குக் காரணம் எனின் சிறிலங்கா இராணுவத்தினர் பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்துவது ஏன்? பொது மக்கள் அனைவரும் புலிகள் என்பதினாலா? அதாவது தமிழ் மக்களைத் தாக்குதல் புலிகளைத் தாக்குதவற்கு ஒப்பானதாகும் என்ற உணர்வினாலா?

அவ்வாறானால் விடுதலைப்புலிகள் மீது குற்றம் சுமத்திக் கொண்டு பொது மக்கள் மீது தாக்குதல் நடத்துபவர்கள் எவ்வாறு விடுதலைப் புலிகளைத் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்பதை நிராகரிக்க முடியும்? சர்வதேச சமூகத்தவர்களும், சிறிலங்கா இராணுவத்தின் தமிழ் மக்கள் மீதான தாக்குதலை அன்றி ஒடுக்கு முறையைப் புலிகளுக்கான பதிலடி எனக் கருதின் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாகப் புலிகள் கூறுவதை அவர்களும், ஏற்றே ஆக வேண்டும்.

இதே சமயம் சிறிலங்கா இராணுவம் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் சிறிலங்கா அரசினதும், ஆயுதப் படையினரின் ஆக்கிரமிப்பு மனோபாவத்திற்கும், நடவடிக்கைகளும், எதிரானவை என்பதை மறுதலிப்பதும் படையினரின் இழப்புக் குறித்துக் கவலை வெளியிடுவதும் ஒரு நடுநிலையான நோக்காக இருக்க மாட்டாது. அவ்வாறு இல்லாது மனிதாபிமான அடிப்படையில் கவலை வெளியிடுவதானால் நீண்டகாலமாக சிறிலங்கா ஆயுதப் படையினரின் ஒடுக்கு முறையை அனுபவித்து வரும் தமிழ் மக்களுக்காக அவர்கள் நாளாந்தம் அதனைத் தெரிவிக்க வேண்டும்.

அவ்வாறு இல்லாது விடில் அதாவது படைத்தரப்பிற்காக மட்டுமே அவர்கள் கவலை கொள்ள முடியுமானால் அவர்கள் இனப்பிரச்சினை விடயத்தில் நடுநிலைமையான பார்வை கொண்டவர்களாகக் கொள்ள முடியாது. அத்தோடு இவர்களின் இத்தகைய போக்கு மேலும், மேலும் இனப் படுகொலை புரிபவர்களுக்கும் ஒடுக்கு முறையைக் கட்டவிழ்த்து விடுபவர்களுக்கும் ஆதரவும், அங்கீகாரமும் அளிப்பதுமாகவே இருக்கும்.

# தமிழரின் தாயகக்கோட்பாட்டை சிங்களவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்

### சிங்களச் சட்டத்தரணி

(கொழும்பு)

தமிழர் தாயகக் கோட்பாடுகள் மற்றும் விடுதலைப்புலிகளின் தன்னாட்சி அதிகாரசபை,சுயநிர்ணய உரிமை ஆகியவற்றை சிங்களவர் ஏற்கவேண்டும் என்று சிங்களஇனத்தைச் சேர்ந்த சட்டத்தரணியும் அரசியல் ஆய்வாளருமான சனிரால் லக்திலக வலியுறுத்தியுள்ளார்,

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்விற்கு கூட்டாட்சி முறையே சிறந்தது என்பது தொடர்பாக கருத்தரங்கு ஒன்று அநுராதபுரம் சாரானந்த பிரிவேனையில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் உரையற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தமிழர் தாயகம் ஏற்றுக்கொள்ளப்படவேண்டிய அம்சம்,தனிநாடு கோரிய புலிகள் ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு காண முன்வந்துள்ளபோது அவர்கள் கோரும் நிர்வாகப் பிரதேசம் வழங்கப்பட வேண்டும்

தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்வதென்பது சிங்களவர்களுக்கு கசப்பான விடயமாக இருப்பது கவலைக்குரியது எனத் தெரிவித்தார்.

இதேவேளை பேராதனைப் பல்கலைக்கழகப் போராசியர் ஜயந்த செனவிரத்ன உரையாற்றுகையில்;

சிங்களமக்கள் வாக்களித்தமையால் மட்டும் மகிந்த ராஜபக்ஷ வெற்றி பெறவில்லை. இலட்சக்கணக்கான தமிழர்கள் வாக்களிக்காதமையினாலேயே அவர் வெற்றிபெற்றார்,

ஏகாதிபத்தியவாதிகளின் ஆட்சி முறையினாலேயே இனப்பிரச்சினை ஏற்பட்டது. தங்கள் நலனுக்காக இலங்கையரை அவர்கள் இரையாக்கியுள்ளனர்.

அனைவரையும் வீழ்த்தி தங்கள் ஆதிக்கத்திற்குள் இருந்தவர்களைச் ஆங்கிலேயர் ஓரினத்தவராக்க முயன்றனர்.

இதுஒரு மிலேச்சத்தனமான செயல்.இதனால் பலஇனக் குழுக்கள் முகவரி இல்லாமல் போயின.பல இனங்கள் வாழும்நாட்டில் ஒரு இனம் உருவாக முடியாது.

சுதந்திரத்தின் பின்னர் எமது தலைவர்கள் இலங்கையரை ஓரினத்தவராக்கவே அரசியல் யாப்பை உருவாக்கினர்.

இதுமிக மோசமானசெயல். இந்தியா சுதந்திரம் பெற்ற பின்னர் தலைவர்கள் இராஜதந்திரிகளாகத் திகழ்ந்தனர்.

இலங்கையில் இன்றும் பேராசை பிடித்த அரசியல் தலைவர்களேயுள்ளனர் எனத்தெரிவித்துள்ளார்.

# யுத்தநிறுத்த ஒப்பந்தத்திற்கு மிகப்பெரிய ஆபத்து ஏற்பட்டுள்ளது

### கண்காணிப்புக்குழுத்தலைவர்

(கொழும்பு)

இலங்கை யுத்தநிறுத்த ஒப்பந்தத்துக்கு மிகப்பெரிய ஆபத்து ஏற்பட்டுள்ளது என்று போர்நிறுத்த கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஹக்ருப் ஹொக்லண்ட் தெரிவித்துள்ளார்.

வடபகுதியில் அண்மையில் ஏற்பட்டுள்ள சூழ்நிலையின் காரணமாக கடந்த மூன்றரை வருடங்களாக சிறிலங்கா அரச படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் அமுலில் இருந்து வரும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்கு மிகப்பெரிய ஆபத்து உருவாகியுள்ளது.

அண்மையில் யாழ்.குடாநாட்டில் ஏற்பட்ட சம்பவங்களும் மன்னார் மாவட்டத்தில் நடந்துள்ள சம்பவங்களும் எமக்கு மிகுந்த கவலையை ஏற்படுத்தியுள்ளது.

சிறிலங்கா அரசு மற்றும் விடுதலைப் புலிகளுக்கிடையில் கீழ் நிலை அளவில் சந்திப்பு ஒன்றை ஏற்படுத்த முயற்சிக்கின்றோம்.

ஆனால் இதுவரையில்அதற்கு சாதகமான பதில் எதுவும் இருதரப்புக்களிடமிருந்தும் வரவில்லை. களத்தில் அமைதியான சூழ்நிலை இருந்தால் தான் இருதரப்பினரிடையே உயர்நிலைப பேச்சுக்களை ஏற்பாடு செய்து நடத்துவது சாத்தியமாகும் என்றார் அவர்.

# இயல்பு வாழ்வுக்கு உத்தரவாதம் கோரி யாழில் அரச ஊழியர் பணிப்புறக்கணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இயல்பு வாழ்விற்கு உத்தரவாதம் வழங்கக்கோரி அரச ஊழியர்கள் நாளை பணிப்புறக்கணிப்பு ஒன்றினை மேற்கொள்ளவுள்ளதாக அறிவித்துள்ளனர். உடனடி மனிதாபிமானப்பணிகளுடன் தொடர்பு பட்ட திணைக்களங்கள் தவிர்ந்த ஏனைய திணைக்கள ஊழியர்கள் இந்தப்பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளன. ஒரு சமூகத்தின் அதியுயர் கல்விக்கழகமாகிய பல்கலைக் கழகத்தின் துணைவேந்தருக்கு கௌரவமும் பாதுகாப்புமில்லை எனில் சாதாரண மக்களின் பாதுகாப்பிற்கும் கௌரவத்திற்கும் என்ன உத்தரவாதம்? இந்த இக்கட்டான நிலையில் சிங்கள அராஜகங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து இயல்புவாழ்க் கையையும் மனித கௌரவத்தையும் வென்றெடுக்கவேண்டும். நாம் ஒன்று பட்டு இவற்றை சர்வதேசத்திற்கு தெரியப்படுத்தி அரச படையினரின் அடாவடித்தனங்களை நிறுத்தவேண்டியது அவசியம். எமது பாதுகாப்பை உறுதி செய்யும் வரை, இயல்பு வாழ்க்கைக்கு உத்தரவாதம் அளிக்கப்படும் வரை நாளைமுதல்பணிப்புறக் கணிப்பினை மேற்கொள்வோம் என இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

# கத்திக்குத்தில் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகருக்கு வெளியே நாவற்கேணி காட்டுப் பகுதியில் கண்டியைச் சேர்ந்த வாகனச்சாரதி ஒருவர் அடையாளம் தெரியாத நபர்களால் கத்தியால் குத்திக் கொல்லப்பட்டுள்ளார்.

கண்டி மடதெனிவைச் சேர்ந்த மாரசிங்க முதியன் சலாகே சுதத் மங்கள மாரசிங்க (வயது-36) என்பவரே நேற்று முன்தினம் கடத்தப்பட்டு கொல்லப்பட்டிருக்கலாம் என சிறிலங்கா பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

சட்டைப் பைக்குள் இருந்த வாகனச்சாரதி அனுமதிப்பத்திரத்தின் அடிப்படையில் அவர் அடையாளம் காணப்பட்டுள்ளார். அவரது வாகனத்திற்கு என்ன நடந்தது என்பது குறித்து இதுவரை கண்டறியப்படவில்லை என்று மட்டக்களப்புப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# இந்தியத்தூதுவர் மகிந்தவுடன் ஆலோசனை

சிறிலங்கா சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சிறிலங்காவுக்கான இந்தியத்தூதுவர் நிருபமாராவ் கொழும்பில் சந்தித்துப்பேசியுள்ளார்.

அலரி மாளிகையில் நடைபெற்ற இச்சந்திப்பு ஒரு மணி நேரம் நீடித்தது. இச்சந்திப்புக்குப் பின்னர் மகிந்தவின் பயண ஏற்பாடுகளை மேற்கொளவதற்காக நிருபமாராவ் புதுடில்லி சென்றார்.

# கொழும்பில் தாக்குதல் நடத்த விடுதலைப்புலிகள்திட்டமாம்

### -பாதுகாப்பு ஆலோசகர் கொட்டகதெனிய கூறுகின்றார்

சிறிலங்கா தலைநகரம் கொழும்பில் பல தாக்குதல்களை நடத்த தமிழீழ விடுதலைப்புலிகள் திட்டமிட்டுள்ளதாக சிறிலங்கா அரசாங்கத்தின் பாதுகாப்பு ஆலோசகர் எச். எம். ஜி.பி.கொட்டகதெனிய தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா இராணுவம் மற்றும் பொலிசாருக்கு எதிராக அண்மைக் காலமாக விடுதலைப்புலிகள் தாக்குதல்கள் நடத்தி யுத்த நிறுத்த மீறல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

கொழும்பிலும் அவர்கள் தாக்குதல் நடத்தத்திட்டமிட்டுள்ளனர்.

இதற்கான சிறப்புப்பயிற்சிகள் தற்போது அளிக்கப்பட்டு வருவதாக புலனாய்வுத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பு நகரத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. மேலதிக தேடுதல் நடவடிக்கைகள் கொழும்பிலும் அதன் புறநகர்ப்பகுதியிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என அவர் தெரிவித்தார்.

# போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் பணி

## யாழ்ப்பாணத்தில் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா இராணுவ வன்முறைகளும் அதற்கான எதிர்வினைகளும் அதிகரித்து வரும் நிலையில் இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவினர் தமது பணிகளை இடைநிறுத்தியுள்ளனர் என இணையத்தளச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கொழும்பில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஊடகவியலாளர்களிடம் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஹக்ருப் ஹொக்லண்ட் கூறியதாக வெளியாகிய தகவலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

யாழில். எமது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும்வரை பணிகளை இடைநிறுத்த யாழ்.கண்காணிப்புக் குழுவினருக்கு அறிவுறுத்தியுள்ளோம்.

கடந்த வியாழக்கிழமை முதல் யாழில் கண்காணிப்புக் குழுவினர் தமது பணிகளை இடைநிறுத்தியுள்ளனர்.

டிசம்பர் 19 ஆம் நாள் யாழ்ப்பாண மாணவர்கள் அரச படையினர் மீது கற்களை மட்டும் வீசவில்லை. கண்காணிப்புக்குழு அலுவலகத்துக்குள்ளும் வலுக்கட்டாயமாக உள்நுழைய முயன்றனர்.அதை அமைதியான ஊர்வலம் என்று அழைக்க முடியாது. அது மிகவும் மோசமானது.

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் அனைத்து ஆர்ப்பாட்டங்களுக்கும் சில இளைஞர்கள் தான் முன்னிலை வகிக்கின்றனர். அவர்களை இராணுவம் அடையாளம்கண்டு உடனே கைது செய்ய வேண்டும்.

வடக்கு-கிழக்கில் சிறிலங்கா அரச படையினர் அமைதியற்ற சூழலை உருவாக்கியுள்ளனர். அவர்கள் கண்காணிப்புக் குழுவினரது பாதுகாப்பிலும் அக்கறை கொள்ளவில்லை.

கண்காணிப்புக்குழுவினர் மீதும் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. எமது வாகனத் தொடரணி தாக்கப்பட்டது.

வடக்கு-கிழக்கு நிலைமையானது யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை ஆபத்துக்குள்ளாக்கி இருக்கிறது. படையினர் அமைதிக்கு எதிராக உள்ளனர். அவர்கள் அமைதி போதும் போதும் என்று கூறுகின்றனர்.

பேசாலை தாக்குதல் வன்மையான கண்டனத்துக்குரியது

எமது கண்காணிப்புக் குழுவினரது பாதுகாப்புக்கு சர்வதேச நாடுகளினது உதவியைக் கோரமாட்டோம். சிறிலங்கா அரச படையினரால் 100 வீதம் எமக்கு பாதுகாப்பு அளிக்க முடியும்.

தற்போதைய நிலைமைகளைச் சீராக்க விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா அரசாங்கத்துக்கும் மேல்நிலை அளவிலும் கீழ்நிலை அளவிலும் உடனடியாக பேச்சுக்கள் நடத்தப்பட வேண்டும்.

அண்மைய படையினர் மீதான தாக்குதல்களுக்கு யார் காரணம் உறுதியான ஆதாரங்கள் இன்றி முடிவுக்கு வர இயலாது என்றார் ஹக்ருப்ஹொக்லண்ட்.

## செய்தியாளர் லோகீசனின் "அலையின் வடுக்கள்" நூல்வெளியீடு

ஆழிப்பேரலைகள் முல்லையில் நடத்திய கோரத்தாண்டவம் என்ற தலைப்பில் ஈழநாதம் நாளிதழில் வெளியான சுனாமி பற்றிய தொடர் 'அலையின் வடுக்கள்' என்ற நூலாக வெளிவருகிறது.

சுனாமி முல்லைத்தீவில் நிகழ்த்திய கோரத்தையும் அதனை எதிர்கொண்ட முறைகள் என்பவற்றை வெளிப்படுத்தும் முகமாக மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டவர்களையும் அதனை நெறிப்படுத்திய தளபதிகள் மற்றும் உயிர்தப்பிய மக்கள், போராளிகள் ஆகியோரின் அனுபவங்களைக்கொண்டதாகவும் இந்தத் தொடர் வெளியானது.

ஈழநாதம் நாளிதழின் செய்தியாளரான அ.லோகீசன் 57 பகுதிகள் தொடராக இதனை பத்திரிகையில் எழுதியி ருந்தார். இந்தத் தொடர் திருத்திய மைக்கப்பட்டு "அலையின் வடுக்கள்' என்ற நூலாக வெளிவருகிறது.

சுனாமியின் முதலாம் ஆண்டு நினைவு நிகழ்வு இடம்பெறும் முல்லைத்தீவு, வடமராட்சி கிழக்கு, சுண்டிக்குளம் கல்லாறு ஆகிய இடங்களில் நாளை இந்த நூல் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

## படையினரின் சூட்டில் இரு இளைஞர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஒட்டுமடம் ஐந்து சந்திக்கு அருகாமையில் சிறிலங்கா படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி இரு இளைஞர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினமிரவு 7.30 மணியளவில் உந்துருளியில் வந்த இந்த இளைஞர்கள் மீது படையினர் துப்பக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

மானிப்பாய் மெமோரியல் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவரான ஆனைக்கோட்டை முள்ளியைச் சேர்ந்த சண்முகநாதன் ரொபின்சன் (வயது-18), தச்சுவேலை செய்பவரான சிறிகாந்தராசா கஜேந்திரன் (வயது-19) ஆகியோரே படுகாயமடைந்து யாழ். போதனா வைத்திய சாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (41)

## வாள்வெட்டில் ஒருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பள்ளங்காடு மற்றும் காக்கை தீவு சாவக்காட்டுப் பகுதி மக்களுக்கு இடையே இடம்பெற்ற சமூகச் சண்டை காரணமாக நான்கு பிள்ளைகளின் தந்தை ஒருவர் வாள்வெட்டுக்குள்ளாகியுள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் சுமார் ஐம்பதுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயம்காரணமாக இடம்பெயர்ந்துள்ளன. குறிப்பிட்ட சமூகப் பிரச்சினைக்குப் பின்னால் இராணுவத்தினர் இருப்பதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றார்கள்.

பொலிசாருக்கு இந்த விடயம் சம்பந்தமாக முறையிட்ட போதும் அவர்கள் குறிப்பிட்ட இடத்திற்கு வரமறுத்துவிட்டார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவத்தினர் பார்த்துக்கொண்டு நிற்கும் நிலைமையிலேயே இத்தாக்குதல்கள் இடம்பெற்றதுடன் வீடுகள் உடைத்து தீயிடப்பட்ட நிகழ்வுகளும் இடம்பெற்றதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (41)

## இணைத்தலைமை நாடுகளின் பிரதிநிதிகள் கண்டன மனுவை ஏற்க மறுப்பு

(கிளிநொச்சி)

கடற்படையின் பாலியல் வல்லுறவை கண்டிக்கும் மனுவை ஏற்க இணைத்தலைமை நாடுகளின் பிரதிநிதிகள் மறுத்துள்ளனர்.

இது தொடர்பாக தெரியவருகையில், நேற்று கிளிநொச்சிக்கு விஜயம் செய்திருந்த இணைத் தலைமை நாடுகளின் பிரதிநிதிகளான யப்பான், பிரிட்டன், நோர்வே மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி ஆகியோரடங்கிய குழுவினரிடம் கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அமைப்புக்கள் ஒன்றிணைந்து கண்டன மனுவொன்றை கையளிக்க பேரணியாக வந்து காத்திருந்தன.



(படம்-சோதி)

புங்குடுதீவில் சிறிலங்கா கடற்படையினரால் இளம்பெண்ணாகிய இளையதம்பி தர்சினி பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டமையை கண்டித்தே இந்த மனுவை கையளிக்க அவை ஏற்பாடு செய்திருந்தன.

எனினும், விடுதலைப் புலிகளுடனான சந்திப்பை முடித்துவிட்டு வந்த இணைத்தலைமை நாடுகளின் பிரதிநிதிகள், அவற்றை ஏற்கவோ பேரணியாளர்களின் கோரிக்கைகளை அவதானிக்கவோ முயற்சிக்காமல் தவிர்த்துவிட்டு வேறு பாதைவழியாக சென்றுள்ளனர். இதனால், கண்டன மனுவைக் கையளிக்க நீண்ட நேரமாக காத்திருநத பல நூற்றுக்கணக்கான மக்கள் பயனேதுமின்றித் திரும்பிச் சென்றுள்ளனர்.

## படையினருக்கு எதிராக குடாநாட்டில் பரவலாகத் தாக்குதல்; 6 படையினர் காயம்

யாழ்.குடாநாட்டில் பரவலாக நேற்றையதினமும் இராணுவத்தினருக்கெதிரான தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.வெவ்வேறான மூன்று தாக்கு தல்களிலும் சிக்கி ஆறிற்கும் அதிகமான படையினர் காயமடைந்துள் ளனர்.

யாழ்.நகரப்பகுதியில்...

யாழ்நகரின் கரையோரப் பகுதியான கோட்டை மற்றும் அதையொட்டிய தந்தை செல்வா நினைவுத்தூபி அமைந்துள்ள பிரதான வீதிப் பகுதியில் படையினருக்கு எதிராக நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் படையினர் மூவர் காயமடைந்துள்ளனர். அவர்களில் ஒருவரது நிலை மோசமாகவுள்ளதாக படைத்தரப்புத்தகவல்கள் தெரிவிக்கின்றன. காயமடைந்தவர்கள் விமானப்படை உலங்கு வானூர்தி மூலம் பலாலி இராணுவ வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டிருந்தனர்.இதேவேளை ரோந்து சென்ற படையினர் மீது மாலை 6.10 மணியளவில் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது. இருதரப்பினரும் சுமார் பத்து நிமிடங்களிற்கும் மேலாக மோதிக் கொண்டனர்.

இம்மோதலையடுத்து யாழ்.நகர் வெறிச் சோடியது. வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டு,மக்கள் அவசர அவசரமாக நகரிலிருந்து வெளியேறினர்.

இருபாலையில்...

யாழ். பருத்தித்துறை வீதியின் இருபாலைச் சந்திப்பகுதியில் படையினர் மீது பிற்பகல் கைக்குண்டுத் தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டுள்ளது. இச்சம்பவத்தில் படைச்சிப்பாய் ஒருவர் காயமடைந்துள்ளார். தாக்குதல் சம்பவத்தையடுத்து மக்கள் படையினரின் தாக்குதலுக்கு உள்ளாகினர். அப்பகுதி வர்த்தகர்கள் படையினரால் விசாரணைக்கென அழைத்துச்செல்லப்பட்டு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சாவகச்சேரியில்...

தென்மராட்சி சாவகச்சேரியின் தனங்கிளப்பு வீதியிலுள்ள இராணுவக்காவலரண் மீதும் பிற்பகல் கைக்குண்டுத் தாக்குதலொன்று நடத்தப்பட்டுள்ளது. இச்சம்பவத்தில் அங்கு கடமையில் இருந்த படையினர் காயமடைந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

யாழ்.இந்துச் கல்லூரியடியில்...

யாழ். இந்துக் கல்லூரி முன்பாக வீதிரோந்துகளில் ஈடுபட்டிருந்த படையினர் நேற்று காலை பொது மக்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. (27)

### ஆழிப்பேரலை...

தென்கிழக்காசியா ,ஆபிரிக்கா ஆகிய பிராந்தியங்களில் பெரும் உயிரழிவு ஏற்பட்டது.தமிழீழத் தாயகத்தில் பொத்துவில் தொடக்கம் காரைநகர் வரை எமது மக்களின் உயிர்கள் காலை 08.30 மணி தொடக்கம் முற்பகல் 10.30 மணி வரை ஆழிப்பேரலையால் காவு கொள்ளப்பட்டன.

### வீரச்சாவு...

தாக்குதலின் போது துணைப் படை வீரர் ஒருவர் வீரச்சாவடைந் துள்ளார்.

துணைப்படை வீரர் வீரவேங்கை புவனேந்திரன்

இராசலிங்கம்-புவனேந்திரன் த.மு. விநாயகர் கிராமம் சித்தாண்டி ஒட்டு மட்டக்களப்பு)

என்ற துணைப்படை வீரரே வீரச்சாவடைந்துள்ளார். இம்மா வீரர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

### நத்தார் நள்ளிரவு...

கருணை நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை 1.05 மணிக்கு துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் ஒன்று கேட்டதாகவும் அதனையடுத்து தொடர்ச்சியான துப்பாக்கி வேட்டுக்கள் கேட்டதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

இதனையடுத்து காயமடைந்த ஜோசப் பரராசசிங்கம் அவர்களை அவசரமாக மருத்துவமனைக்கு எடுத்துச்சென்ற போதிலும் அவர் இடையிலேயே உயிரிழந்துள்ளார்.

இவரது சடலம் மட்டு.மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. அவரது மனைவி சுகுணம் பரராசசிங்கம் துப்பாக்கிச் சூடு மேற்கொண்டவர்களைத் தடுக்க முயன்ற போது துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் மட்டக்களப்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவத்தில் காயமடைந்த மேலும் ஏழுபேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் சிறுவர்களும் உள்ளடங்கியுள்ளனர் என தெரியவருகின்றது.

1934ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27ஆம் திகதி பிறந்த ஜோசப்பரராஜசிங்கம் அவர்கள் 1990ஆம் ஆண்டு முதல்முறையாகப் பாராளுமன்றத்துக்குத் தெரிவாகி மீண்டும் 1994 இலும் 2000 ஆம் ஆண்டிலும் பாராளுமன்ற உறுப்பினரா னார். இவர் காமன் வெல்த் பாராளுமன்ற சார்க் பாராளுமன்ற குழுக்களின் செயற்குழு உறுப்பினராவார். (33)

### யாழ்...

வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ள போதிலும் மக்கள் எவரும் அங்கு செல்ல முடியாமையால் அவர்கள் யாரென அடையாளம் காணப்படவில்லை.

நேற்றிரவு முழுவது அப்பகுதியில் இராணுவம் குவிக்கப்பட்டிருந்ததால் மக்கள் வெளியே நடமாட அஞ்சி வீடுகள், வர்த்தக நிறுவனங்களிலேயே தங்கியிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

### துயர் பகிர்கின்றோம்

**மார்க்கண்டு புஸ்பமலர் (மலர்) சாவகச்சேரி**

சாவகச்சேரிப்பகுதியில் இராணுவத்தினரின் துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் உயிரிழந்த மார்க்கண்டு புஸ்பமலரின் பிரிவால் துயறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

தகவல்: ஜெரி குடும்பத்தினர்-கிளிநொச்சி.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.